வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 29.04.2024 திங்கட்கிழமை இதழ் : 120 பக்கங்கள் : 12

### இலங்கை - இந்தியா இடையே

# மின்சாரத்தை பகிர்வதற்கான ஒப்பந்த வரைவு பரிசீலனையில்!

**கொழும்பு, ஏப். 29**

**கடலுக்கு அடியில் கேபிள்கள் மூலம் மின்சாரத்தை பகிர்வதற்கு இலங்கை - இந்தியா இணங்கியுள்ளன. இதற்கான ஒப்பந்தம் - திட்டத்தின் வரைவை இந்தியா இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது. இதனை, இலங்கை மின்சார சபை பரிசீலித்து வருகின்றது என்று தெரிய வருகின்றது.**



இரு நாடுகளின் மின்சார பரிமாற்றத் திட்டத்தின் தொழில்நுட்ப மதிப்பீட்டிற்காக இலங்கை மின்சார சபையின் குழு ஒன்று இந்தியா சென்றது.

இதைத் தொடர்ந்து மின்சாரத்தை கடலுக்கு அடியில் கேபிள்கள் மூலம் பரிமாற இரு நாடுகளும் இணங்கின.

இதைத் தொடர்ந்தே இந்தியா திட்ட வரைவை அனுப்பி வைத்துள்ளது.

இதேசமயம், இந்தியா - இலங்கை மின்சார இணைப்பு திட்டத்தை 2030ஆம் ஆண்டுக்குள் செயல்படுத்துவதற்கு மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர உறுதியளித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 4 கிலோ தங்கத்துடன் மூவர் கைதாகினர்!

*கிளிநொச்சி, ஏப். 29*

*4 கிலோ தங்கத்துடன் மூன்று பேரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.*

*கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் அருகே நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.*

*இராணுவ புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் விசேட அதிரடிப் படையினருக்கு தெரிவிக்கப்பட்டது.*

*இதன் அடிப்படையில் கார் ஒன்றை மறித்து*

11

## உரிமையில்லாத மக்களாக இலங்கையில் வாழ்ந்தோம்

### ஆளுநர் செந்தில் தொண்டமான்

*ஏறாவூர், ஏப். 29*

உரிமை இல்லாத மக்களாக இந்த நாட்டில் வாழ்ந்தோம். எனவே, எங்கள் உரிமைகளைத் தக்கவைத்து மலையகம் மேலும் வளர்ச்சியடையத் தேவையான திட்டத்தை வைத்து ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தொழிலாளார் காங்கிரஸ் முடிவெடுக்கும்.

11

## மாகாண சபை முறை தொடர வேண்டும்!

### அநுரகுமார திஸநாயக்கா

*கொழும்பு, ஏப். 29*

மாகாண சபை முறைமை இனப் பிரச்னைக்கு நிரந்தர தீர்வை வழங்காது. ஆனால், அது தங்களின் உரிமை என தமிழ் மக்கள் கருதுகின்றனர். எனவே, மாகாண சபை முறை தொடரவேண்டும் - இவ்வாறு ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கா கூறியுள்ளார்.

பிரபல ஆங்கில வார இதழுக்கு அநுரகுமார அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவரின் நேர்காணலின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

11

## மகிந்த, கோட்டாபய போன்று ரணிலும் தமிழரின் எதிரியே!

### ஐக்கிய மக்கள் சக்தி சொல்கிறது

*கொழும்பு, ஏப். 29*

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரைப் போல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ் மக்களின் எதிரியாவார் - இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அவர் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் அவருக்கு எதிராகவே வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்கள், தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதரவுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித்

11

## 5 வயது சிறுமி திடீர் மரணம்!

*யாழ்ப்பாணம், ஏப். 29*

காய்ச்சலுக்கு சிகிச்சை பெறுவதற்காக மருத்துவமனைக்குச் சென்று கொண்டிருந்த 5 வயது சிறுமி வழியிலேயே உயிரிழந்த துயர சம்பவம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

ஆவரங்கால் கிழக்கை சேர்ந்த சிறுமியே

11

## முதுகெலும்பு இருந்தால் சஜித், அநுர சமஷ்டி அரசமைப்பை அறிவிக்கட்டும்

### கஜேந்திரன் எம். பி. சவால்

*கொழும்பு, ஏப். 29*

ஒற்றையாட்சி நீக்கப்பட்டு சமஷ்டி அரசமைப்பு கொண்டுவரப்படும் என்ற அறிவிப்பை சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் முதுகெலும்பு இருந்தால் வெளியிடட்டும் - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் கூறியுள்ளார்.

அத்துடன், 75 ஆண்டுகளாக இந்த நாட்டை குட்டிச்சுவராக்கிக் கொண்டிருக்கும் இந்த ஒற்றையாட்சி முறைமையை மாற்றுமாறு பேராயர் மல்கம் ரஞ்சித் கோரிக்கை முன்வைக்க வேண்டும். கத்தோலிக்க சமூகம் மீது கரிசனை கொண்டு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் பற்றி பேராயர் தொடர்ச்சியாக பேசி வருகின்றார். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடக் கக்கூடாது என்றால் இந்தக்

11

## நீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்

*கிளிநொச்சி, ஏப். 29*

தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்த சபை விடுத்துள்ள குறிப்பில்,

தற்போது நிலவும் வெப்பமான காலநிலையால் மக்களின் தண்ணீர் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதனால், அதிகளவு தண்ணீரை

11

## கொழும்பில் ஏட்டிக்குப் போட்டியாக தேசிய கட்சிகள் மே தினக் கூட்டம்!

*கொழும்பு, ஏப். 29*

நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் கொழும்பில் ஏட்டிக்குப் போட்டியாக மே தினக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளன. இந்தக் கூட்டங்களில் இலட்சக்கணக்கில் மக்களைத் திரட்டி தமது பலத்தை வெளிப் படுத்துவதற்கும் இந்தக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

11

## ஈ. பி. எவ். வட்டியை 13 வீதமாக அதிகரிக்க அரசு நடவடிக்கை

### நிதி இராஜாங்க அமைச்சர்

*கேகாலை, ஏப். 29*

ஊழியர் சேமலாப நிதியத்தின் மிகுதிகளுக்கு தற்போது வழங்கப்படுகின்ற 9 சதவீத வட்டியை 13 சதவீதமாக அதிகரிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

11

## தமிழ் கட்சிகளின் மே நாள் கூட்டங்கள்!

*யாழ்ப்பாணம், ஏப். 29*

உழைப்பாளர் தினமான மே முதலாம் திகதியன்று வடக்கு, கிழக்கில் தமிழ் அரசியல் கட்சிகள் மே நாள் கூட்டத்தை நடத்தவுள்ளன.

**இலங்கை தமிழ் அரசு கட்சி**

இலங்கை தமிழ் அரசு கட்சி, கிளிநொச்சி, மட்டக்களப்பில் மே நாள் கூட்டங்களை

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தல் விவகாரத்தில் இரண்டுபட்டு நின்ற பொதுஜன பெரமுன இப்போது ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாகவே தெரிகின்றது.

ஒரு தரப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அவரையே தமது வேட்பாளராக நிறுத்த வேண்டும் எனவும் நின்றனர். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவோ பெரமுன வேட்பாளராக களம் இறங்கத் தயாராக இருக்கவில்லை. அவர்களின் ஆதரவை கோரி நின்றபோதிலும், அவர்களின் கட்சியில் போட்டியிடுவதை அவர் விரும்பவில்லை. அதற்கு பல காரணங்கள் இருந்தாலும் அவர் எதிர்பார்க்கும் சிறுபான்மையினரின் ஆதரவை அவர்களின் வேட்பாளராக போட்டியிட்டால் பெறமுடியாது என்பது பிரதானமானது. அடுத்த தேர்தலில் சிறுபான்மையினர் வாக்குகள் முக்கியமானவையாக கருதப்படுகின்றன.

பெரமுனவின் சில தலைவர்களோ தாம் இந்தத் தேர்தலில் ஒரு வேட்பாளரை நிறுத்தாவிட்டால் கட்சியாகத் தாம் தோற்றுவிடுவோம் என்றும் அதனால் தமது தரப்புக்கு வெற்றி கிடைக்காது என்று தெரிந்தாலும் தேர்தலில் ஒருவரை நிறுத்தவேண்டும் எனவும் பிடிவாதமாக இருந்தனர். அவ்வாறு பிடிவாதமாக இருந்தவர்களில் நாமல் ராஜபக்ஷ முக்கியமானவர் என்று கூறப்பட்டு வந்தது. தமது ஆதரவாளர்கள் தமது கட்சிக்கே வாக்களிப்பார்கள் என்றும் அவர்களை வேறு ஒரு சின்னத்துக்கு வாக்களிக்குமாறு கோருவது எதிர்காலத்தில் நடக்கும் பாராளுமன்றத் தேர்தலில் தமக்கு எதிராக மாறிவிடும் என்பது அவர்களின் வாதமாக இருந்தது. அதுவும் ஒருவகையில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே கட்சிக்காரர்களால் பார்க்கப்பட்டது.

அதனால்தான் அவர்கள் அவ்வப்போது தமது கட்சியும் ஜனாதிபதித் தோதலில் ஒரு வேட்பாளரை நிறுத்தும் என்றும் அவர் யார் என்ற விபரம் கடைசி நேரத்தில் வெளியிடப்படும் எனவும் அவ்வப்போது கூறிக்கொண்டிருந்தனர். கடைசியாக கட்சியின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ஷகூட தமது கட்சி வேட்பாளரை நிறுத்தும் என்றும் அது ரணில் விக்கிரமசிங்கவாகவும் இருக்கலாம் என்றும் கூறியிருந்தார்.

ஆனால், கடைசியாக நடந்த ரணில் - மகிந்த - பசில் சந்திப்பை தொடந்து, அந்த நிலைமையில் திடீர் மாற்றம் ஏற்பட்டிருப்பதை கட்சியின் நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்துவரும் அவதானிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

கட்சியினரை ஜனாதிபதித் தோல்தல் தொடர்பாக எதுவித அறிவிப்புகளையும் தனித்தனியாக செய்யவேண்டாம் என்று மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருக்கின்றாராம். அதற்குக் காரணத்தைக் கண்டுபிடிக்க அதிகம் ஆராய்ச்சி தேவையிருக்காது.

கட்சியின் முக்கிய தலைவர்களான பலரும் ரணிலுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்பதில் தீவிரமாகவும் பிடிவாதமாகவும் இருக்கின்றனர். மகிந்தரின் பரமவிசுவாசியான பவித்திரா வன்னியாராச்சியே கடைசியாக மகிந்தரை சந்தித்து தமது அந்த முடிவைத் தெரிவித்து இருக்கின்றார். மகிந்த குடும்பத்தின் நெருக்கமானவராகவும் நீண்ட காலமாக அவருடன் இருந்து வருபவருமான பிரதமர் தினேஷ் குணவர்த்தன முதல் பிரசன்ன ரணதுங்க, மகிந்தானந்த அளுத்கமகே, சுசில் பிரேமஜயந்த, பந்துல குணவர்த்தன என்று கட்சியின் மூத்த தலைவர்கள் மட்டுமின்றி, காஞ்சன வீரசேகர, ரமேஷ் பத்திரண, ஷெகான் சேமசிங்க போன்ற இளம் தலைவர்களும் ரணிலை ஆதரிக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றனர். மகிந்த தரப்பு தனியான வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் இவர்கள் அனைவரும் நிரந்தரமாகவே கட்சியை விட்டு வெளியேறி ரணில் தரப்புடன் இணைந்துவிடுவார்கள் என்பது தெரிந்ததே.

இந்த நிலையில் தனித்து வேட்பாளரை களம் இறக்கினால் பெரும்பாலும் கட்சியே காணாமல்போய்விடும் என்ற அச்சம் இப்போது மகிந்த தரப்புக்கு ஏற்பட்டிருக்கின்றதாம். அப்படியொரு வேட்பாளரை நிறுத்தினால் ராஜபக்ஷ குடும்பத்தினரும் ரோஹித அபே குணவர்த்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ போன்ற ஒரு சிலரும் மாத்திரமே எஞ்சுவார்கள் என்பதால் ரணிலை ஆதரிப்பதே புத்திசாலித்தனமானது என்ற முடிவுக்கு வந்திருக்கின்றாராம் மகிந்தர்.

இதனால், இப்போது இக்கட்டில் இருப்பவர் நிமல் லான்சா தரப்பினர் என்பதும் கவனிக்கத்தக்கது. அவர்கள் ரணிலுக்காக அணிதிரட்டியபோது ரணில் மகிந்த தரப்பின் ஆதரவுடன் போட்டியிடமாட்டார் என்று நம்பினார்கள். அதனால்தான் பொதுஜன பெரமுனவின் எம்.பிக்களில் பெரும் எண்ணிக்கையானவர்களைப் பிரித்து எடுத்து தனி அணியாக கொண்டுவந்தனர். இப்போது மகிந்த தரப்பு பகிரங்கமாகவே ரணிலை ஆதரித்து களத்தில் நிற்குமானால், அவர்கள் ரணிலை ஆதரிப்பதில் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தப்போவதில்லை. அவர்களும் மகிந்த அணி போலவே தோற்றமளிப்பார்கள். அதேநேரம் மகிந்த தரப்புக்கு கிடைக்கின்ற முக்கியத்துவம் தமக்கு கிடைக்காது என்பதும் அவர்களுக்குத் தெரியாததல்ல.

இதனால், அவர்கள் சற்று அதிருப்தியடைந்திருப்பதாக தெரிவிக்கும் தெற்கு ஊடகவியலாளர் ஒருவர் அவர்களின் இந்த அதிருப்தியை பயன்படுத்தி சஜித் தரப்பும் அவர்களை நெருங்கலாம் என்கிறார்.

- ஊர்க்குருவி.

# என் மகன் இனி உயிரோடு வரமாட்டான்!

## அரசிடம் நஷ்டஈடு கோரிய தாய்



வாழைச்சேனை, ஏப். 29

வலிந்து காணாமலாக்கப்பட்ட தனது மகன் உயிரோடு திரும்பி வருவார் என்ற நம்பிக்கை தனக்கு கிடையாது எனவும் நோயுற்றுள்ள தனக்கு அரசாங்கத்தால் நஷ்டஈடுகளை தந்து உதவுமாறு தாய் கவலையுடன் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2003 ஆம் ஆண்டு கரடியனாறு பகுதியில் எனது மகன் காணாமல் போயுள்ளார். இதுவரை காலமும் நான் தேடித் திரிகின்றேன். இன்றுவரை உரிய பதில் கிடைக்கவில்லை. இனி அவர் திரும்பி வருவார் என்ற நம்பிக்கை எனக்கு கிடையாது. நோயுற்றுள்ள எனக்கு அரசாங்கத்தால் நஷ்டஈடுகளை தந்து உதவுவதன் மூலம் வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த முடியும். எனது மகன் உயிரோடு இருந்திருந்தால் என்னை நன்றாகப் பார்த்திருப்பார் என்று காணாமலாக்கப்பட்ட மகன் ஒருவரின் தாய் கவலையுடன் தெரிவித்தார்.

காணாமலாக்கப்பட்டோர் ஆட்கள் பற்றிய அலுவலகத்தால் சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மண்முனை வடக்கு மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேச செயலகத்துக்குட்பட்ட 34 காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது கொழும்பிலிருந்து வருகைதந்த காணாமலாக்கப்பட்டோர் ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள், மட்டக்களப்பு காணாமலாக்கப்பட்டோர் ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பிராந்திய கிளைக்கு நேரில் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலும், அவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடுகள் வழங்குவது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (எ)

# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான யுவதி 14 நாட்களின் பின் மரணம்

மின்னேரியா, ஏப். 29

மின்னேரியா கிரித்தல பகுதியில் நடந்த புதுவருட கொண்டாட்டத்தின்போது கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த 17 வயது யுவதி மருத்துவமனையில் கிகிச்சை பெற்று வந்த நிலையில் 14 நாட்களுக்குப் பின் உயிரிழந்ததாக மின்னேரியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிரித்தலை பகுதியைச் சேர்ந்த கோசலா சாமோத்ய பண்டார என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்தார்.

பொலநறுவை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அங்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு மீண்டும் பொலநறுவை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையிலேயே குறித்த யுவதி உயிரிழந்தார். (எ)

# ஐஸ் போதைப்பொருள் கடத்தியவர் சிக்கினார்

ராகம, ஏப். 29

மோட்டார் சைக்கிளில் ஐஸ் போதைப்பொருளைக் கடத்தி சென்ற ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

ராகம பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போதே இவர் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து, 20 கிராம் 860 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், மோட்டார் சைக்கிள், டிஜிற்றல் தராசு, கைத்தொலைபேசி, 60 ஆயிரத்து 940 ரூபாய் பணம் என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வெல்லம்பிட்டிய சேதவத்த பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர்.

இவர் மேலதிக விசாரணைகளுக்காக ராகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ)

# போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி தாய்லாந்து செல்ல முயன்றவர் கைது

கொழும்பு, ஏப். 29

மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றத்தால் பயணத்தடை விதிக்கப்பட்டிருந்த வர்த்தகர் ஒருவர் போலி கடவுச் சீட்டை பயன்படுத்தி தாய்லாந்துக்கு தப்பி செல்ல முற்பட்டபோது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்

இவர் கொழும்பு பிரதேசத்தில் வசிக்கும் 64 வயதான வர்த்தகர் என்பதுடன் இவர் நேற்று தாய்லாந்தின் பாங்கொக் நகருக்குப் புறப்படவிருந்த விமானத்தில் ஏறுவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றிருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளார் .

இவர் கட்டுநாயக்கா விமான நிலை யத்துக்கு வந்த போது விமான நிலைய குடிவரவு பிரிவினர் இவருடைய ஆவணங்களைப் பரிசோதித்த போது அவை சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் காணப்பட்டன.

இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தொழில்நுட்ப பரிசோதனையில் அவை போலியானவை என்று கண்டறியப்பட்டன. இதையடுத்து, அவர் கைதுசெய்யப்பட்டார். (ஐ)

# கவிஞர் அம்பி காலமானார்!



மெல்பர்ன், ஏப். 29

கவிஞர் அம்பி என்று அறியப்பட்ட இராமலிங்கம் அம்பிகைபாகர் நேற்றுமுன்தினம் தனது 95ஆவது வயதில் அவுஸ்திரேலியாவில் காலமானார்.

கவிதை, கவிதை நாடகம், சிறுகதை, கட்டுரை, விமர்சனம், ஆய்வு சார் துறைகளில் மிளிர்ந்த கவிஞர் அம்பி, குழந்தை இலக்கியத்துக்கு மிகவும் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளார்.

1929 பெப்ரவரி 17ஆம் திகதி நாவற்குழியில் பிறந்த இவர், ஆரம்பக் கல்வியை நாவற்குழியிலும் உயர் கல்வியை யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியிலும் கற்றார். கணித - விஞ்ஞான ஆசிரியரான அவர் நாட்டின் பல இடங்களிலும் பணியாற்றினார்.

கல்வி வெளியீட்டு பிரிவில் தமிழ் பாடநூல் ஆசிரியராக பணியாற்றிய அம்பி 1981இல் பப்புவா நியூகினிக்கு பணி நிமித்தம் சென்றார். 1992இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தார்.

தினகரனில் வெளியான இலட்சியக் கோடி என்ற சிறுகதை மூலம் எழுத்துலகில் அறி முகமான அம்பி. தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணாத்துரை காலத்தில் நடத்தப்பட்ட தமிழாராய்ச்சி மாநாட்டை ஒட்டி நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.

தமிழிலும் ஆங்கிலத்திலுமாக 20இற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். தனது 90ஆவது வயதிலும் எழுத்தைத் தொடர்ந்த அவர், சொல்லாத கதைகள் என்ற மின் நூலை அமேசன் கிண்டிலில் வெளியிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
29.04.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், சித்திரை 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# புலம்பெயர் தமிழ் சமூகம் என்ன செய்யப் போகின்றது?

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸநாயக்க கூறுவதை ஒவ்வொரு தமிழரும் – குறிப்பாக புலம்பெயர் தமிழ் மக்கள் உற்று நோக்க வேண்டும். அநுர கூறுகின்றார், "2019இல், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வெளிநாட்டிலுள்ள சிங்கள மக்கள் ஆதரவளித்தது போன்று இம்முறை தேசிய மக்கள் சக்தியை ஆதரிப்பார்கள். ஏனெனில், நாங்கள் மட்டும்தான் அவர்களின் பிரதான தெரிவாகும்" அதேவேளை அவர் இவ்வாறும் கூறியிருக்கின்றார் – அதாவது, "வெளிநாட்டு வாழ் இலங்கையர்கள் (சிங்கள மக்கள்) எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பிரதான சக்தியாக இருக்கின்றனர். உங்களுடைய குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் அனைவருடனும் தொலைபேசியில் பேசுங்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்குமாறு கூறுங்கள்."

இந்தப் பின்புலத்தில் சிந்தித்தால் புலம்பெயர் தமிழ் மக்கள் என்ன செய்யப் போகின்றீர்கள், "ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிக்குமாறு உங்களின் தாயக உறவுகளுக்கு கூறப் போகின்றீர்கள்? தென்னிலங்கையை சேர்ந்த ஒரு வேட்பாளருக்கா அல்லது தமிழ்த் தேசிய எழுச்சியின் குறியீடாக ஒரு தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்குமாறு கூறப் போகின்றீர்களா?

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் புலம்பெயர் சமூகம் எவ்வாறு தன்னை ஒரு பிரதான சக்தியாக முன்னிறுத்தப் போகின்றது? புலம்பெயர் சமூகத்தால் அது முடியுமா? வெளிநாடுகளில் வாழும் சிங்கள புலம்பெயர் சமூகம் அநுரகுமார கூறுவது போன்று கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக பெருமளவில் அணிதிரண்டது. கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சியை தொடர்ந்து சோர்வுற்றிருக்கும் அவர்கள் தாங்கள் ஆதரிக்கக்கூடிய இன்னொருவரை தேடுகின்றார்கள். இந்த இடத்தையே அநுரகுமார திஸநாயக்க இலக்கு வைத்திருக்கின்றார். அவர் சரியாகத்தான் விடயங்களைக் கையாளுகின்றார்.

ஆனால், தொடர்ந்தும் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு வாக்களித்து ஏமாந்து கொண்டிருக்கும் தமிழ் மக்கள் இம்முறையும் ஏமாறுவதா அல்லது இம்முறை விழித்துக் கொள்வதா? தமிழ் மக்களை விழிப்புற செய்வதிலும் தமிழ்த் தேசிய கட்சிகளை இந்த இடத்தை நோக்கி நகர்த்துவதிலும் புலம்பெயர் தமிழ் சமூகம் எவ்வாறான பங்களிப்பை வழங்கப் போகின்றது?

2009இற்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியலை வடிவமைப்பதில் தமிழ் புலம்பெயர் சமூகம் பல்வேறு தலையீடுகளை செய்து வந்திருக்கின்றது. ஆனால், அவ்வாறான தலையீட்டினால் தாயகத்தில் தமிழ்த் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதில் வெற்றிபெற முடியவில்லை. மாறாக, புலம்பெயர் சமூகத்தின் தலையீடுகளே பிளவுகளுக்கும் வழிவகுத்திருக்கின்றது. அவற்றை சரிசெய்து தாயகத்தில் தமிழ்த் தேசிய அரசியலை மீள் எழுச்சியின் ஆரம்பமாக ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்திக்கொள்ள முடியும். ஓர் அரிய வாய்ப்பு தமிழ் மக்களை நோக்கி வருகின்றது. இதனை சரியாகப் பயன்படுத்திக் கொள்வதிலும் தமிழ்த் தேசிய கட்சிகள் மத்தியில் நூறு விகிதம் இல்லாவிட்டாலும்கூட பெரும்பான்மையாக தமிழ்த் தேசிய ஐக்கியம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு தமிழ் பொது வேட்பாளர் என்னும் எண்ணக்கரு ஒரு வாய்ப்பாகும். இதனை நோக்கி தமிழ் புலம்பெயர் சமூகம் அணிதிரள வேண்டும். இந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்பவர்களே தமிழ்த் தேசியத்தின் பக்கமாக நிற்பவர் என்னும் நிலைப்பாட்டை புலம்பெயர் அமைப்புகள் பிரகடனம் செய்ய வேண்டும். இந்த ஜனாதிபதி தேர்தலை ஒரு வரலாற்று வாய்ப்பாகக் கருதி அனைத்து அமைப்புகளும் அணிதிரள வேண்டும்.

# வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று ரஜிவர்மன், சிவராம் நினைவேந்தல்!




வடமராட்சி, ஏப். 29

மாமனிதர் தராக்கி என்று அறியப்பட்ட சிவராமின் 19ஆவது நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி ஊடக இல்லத்தில் அதன் தலைவர் கு. மகாலிங்கம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில், ஈகைச்சுடரை படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ரஜிவர்மனின் தாயார் ஏற்றிவைத்தார். இதைத் தொடர்ந்து மாமனிதர் சிவராமின் திருவுருவ படத்துக்கு ஈகை சுடரேற்றி மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலியை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் செலுத்தினார்.

தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ரஜிவர்மனின் திருவுருவ படத்துக்கு ஈகை சுடரேற்றி மலர் மாலையை அணிவித்தார் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்.

இதைத் தொடர்ந்து, ஊடகவியலாளர்கள், அரசியல் கட்சிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் படுகொலையான ஊடகவியலாளர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைத்துறை பீடாதிபதி பேராசிரியர் ரகுராம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வ ராசா கஜேந்திரன், ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிரேம சந்திரன், இலங்கை தமிழ் அரசு கட்சியின் வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச. சுகிர்தன், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைவர் இரத்தினசிங்கம் முரளீதரன், வட மாகாண மீனவர் அமைப்பின் தலைவர் அ. அன்னராசா, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மற்றும் ஊடகவியலாளர்கள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் வலம்புரி நாளிதழுக்கு எதிராக பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டமைக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

ஊடகவியலாளர் தராக்கி சிவராம் கடந்த 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு - பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையம் அருகே இனந்தெரியாதவர்களால் வெள்ளை வானில் கடத்தப்பட்ட பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரின் சடலம் பாராளுமன்றத்துக்கு அருகே மீட்கப்பட்டது.

ஊடகவியலாளர் செல்வராஜா ரஜிவர்மன் உதயன் நாளிதழின் அலுவலக செய்தியாளராக பணியாற்றியபோது 2007 ஏப்ரல் 29ஆம் திகதி ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# கிருமித் தொற்றால் குடும்பஸ்தர் மரணம்

வடமராட்சி, ஏப். 29

உடலில் கிருமித் தொற்று ஏற்பட்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் உயிரிழந்தார்.

தொற்றுக் காரணமாக உயிரிழந்தவர் பருத்தித்துறையை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை (வயது 34) ஆவார்.

உடலில் கட்டி இருப்பதாக கடந்த புதன்கிழமை பருத்தித் துறை ஆதார மருத்துவ மனையில் அவர் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில், அவர் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார். இதனையடுத்து, உடற் கூற்று பரிசோதனையை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி கே.வாசுதேவா மேற்கொண்டார்.

இதன்போது வெளியான அறிக்கையில் அந்த நபர் கிருமித் தொற்று ஏற்பட்டு உயிரிழந்தார் என்று குறிப்பிடப்பட்டது. (ஐ-02)

# மருத்துவமனைகளின் விளையாட்டு விழா!

வடமராட்சி, ஏப். 02


பருத்தித்துறை , தெல்லிப்பழை ஆதார மருத்துவ மனைகளின் தாதிய உத்தியோகத்தர்கள் இடையே ஆண்களுக்கான துடுப்பாட்டடம் மகளிருக்கான வலைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

மே தினத்தன்று (எதிர்வரும் மே 1ஆம் திகதி) மதியம் 1.30 மணிக்கு நெல்லியடி கொலின்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை ஆதார மருத்துவ மனையின் அத்தியட்சகர் மருத்துவர் திருமதி தயாளினி மகேந்திரன் பிரதம விருந்தினராக பங்கேற்கவுள்ளார்.

(ஐ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஏப்ரல் - 29 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - சித்திரை 16
நல்ல நேரம் : 06.30 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சஷ்டி




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். தாய் வழியில் ஆதரவுப் பெருகும். சக ஊழியர்கள் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள். அமோகமான நாள்.

**சிம்மம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். சக ஊழியர்களால் இருந்த பிரச்னைகள் விலகும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியம் இன்று முடியும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும்.உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு கிடைக்கும்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். தடைகள் உடைபடும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வீட்டை அழகுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். இனிமையான நாள்.

**மீனம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

# தி. மு. க. - அ. தி. மு. க. ஆட்சியில் தடையின்றி தொடரும் கொள்ளை

## அன்புமணி ராமதாஸ் எச்சரிக்கை

சென்னை, ஏப். 29

தி. மு. க. ஆட்சி நடந்தாலும், அ. தி. மு. க. ஆட்சி நடந்தாலும் கனிமவளக் கொள்ளை மட்டும் தடைபடுவதே இல்லை என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் இரு கட்சிகளின் ஆட்சியிலும் ஒரே குழுவினர் தான் கனிமக் கொள்ளையை முன்னின்று நடத்துகின்றனர். கனிமவளக் கொள்ளையை தடுத்து நிறுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



தவறினால், தமிழகம் முழுவதும் மக்களைத் திரட்டி மாபெரும் போராட்டத்தை பா. ம. க. முன்னெடுக்கும் என்று அன்புமணி எச்சரித்தார்.

கூடலூர் பகுதியில் கனிமவளக் கொள்ளை நடைபெறும் பகுதிகள் அனைத்தும் யானைகளின் வழித் தடமாக திகழ்பவையாகும். இந்தப் பகுதியில் கனிமவளக் கொள்ளை நடைபெறாமல் தடுக்க வேண்டியது வருவாய்த்துறை, வனத்துறை, கனிமவளத்துறை ஆகியவற்றின் கூட்டுப் பொறுப்பாகும். ஆனால், இவற்றில் எந்தத் துறையும் கனிமவளக் கொள்ளையை கட்டுப்படுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை. அதற்கு முதன்மையான காரணம் இந்தத் துறைகளின் உயரதிகாரிகள் ஊழலில் திளைப்பது தான் என்றும் அன்புமணி குற்றஞ்சாட்டினார். (எ)

சென்னையில் கடும் வெப்பம்

# முதல்வர் மு. க. ஸ்டாலின் கொடைக்கானல் பயணம்

திண்டுக்கல், ஏப். 29

தமிழகத்தின் பல மாவட்டங்களில் மே முதலாம் திகதி முதல் கடுமையான வெப்ப அலை வீசும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. ஏற்கனவே வெயில் வாட்டி வதைக்கும் நிலையில் இந்த அறிவிப்பு, மக்களை மேலும் அச்சுறுத்தியுள்ளது.

இந்த நிலையில், நல்ல சீதோஷ்ணம் நிலவும் கொடைக்கானலுக்கு குடும்பத்துடன் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் இன்று செல்கிறார்.

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் வருகையையொட்டி நேற்று 29 ஆம் திகதி முதல் மே 4 ஆம் திகதி வரை கொடைக்கானலில் ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல் பகுதிகளில் ட்ரோன்கள், பலூன்கள் பறக்கத் தடை விதித்து திண்டுக்கல் பொலிஸ் அதிகாரி உத்தரவிட்டுள்ளார். (எ)

# விஜயகாந்துக்கு பத்மபூஷன் விருது

சென்னை, ஏப். 29

மறைந்த நடிகர் விஜயகாந்துக்கு மே 9 ஆம் திகதி பத்மபூஷன் விருது வழங்கப்படவுள்ளது.

விருது பெற உள்துறை அமைச்சகத்திலிருந்து அழைப்பு வந்துள்ளது. நானும், விஜயபிரபாகரனும் விருது பெற டில்லி செல்லவுள்ளோம் என்று தே. மு. தி. க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார். (எ)

# “தமிழ் மக்கள் நலன் காக்கும் அரசுக்கு அ. தி. மு. க. ஆதரவு”

கோவில்பட்டி, ஏப். 29

பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று யார் பிரதமராக வந்தாலும் மத்தியில் தமிழர் நலன் காக்கின்ற அரசுக்கு அ. தி. மு. க. ஆதரவு அளிக்கும் என்று முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜூ எம். எல். ஏ. தெரிவித்தார்.

கோவில்பட்டி பேருந்து நிலையம் முன்பாக தூத்துக்குடி வடக்கு மாவட்ட அ. தி. மு. க. சார்பில் பொதுமக்கள் கோடைக் காலத்தில் தாகம் தணிப்பதற்காக நீர்- மோர் பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழாவில் கலந்துகொண்ட கடம்பூர் ராஜூ செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழக மக்கள் தமிழகத்தில் நிலவுகின்ற சூழ்நிலைக்கு ஏற்ப நிச்சயமாக நல்ல மாற்றத்துக்கு வாக்களித்திருப்பார்கள் என்று நம்புகிறோம்.

அ. தி. மு. க. ஆட்சிக் காலத்தில் தமிழக பொலிஸ், ஸ்கொட்லாந்து பொலிஸ் துறைக்கு நிகராக இருந்தது.

பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு அ. தி. மு. கவை கைப்பற்றுவோம் என்று சசிகலா கூறுவது நானும் இருக்கிறேன் என்பதை காட்டிக் கொள்வதற்காகவே. அதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.- என்றார். (எ)

# தமிழகத்தில் 19 மாவட்டங்களில் வெப்ப அலை

சென்னை, ஏப். 29

தமிழகத்தில் 19 மாவட்டங்களில் வெப்ப அலை வீசக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வட தமிழக மாவட்டங்கள் உட்பட 19 மாவட்டங்களில் நேற்று முதல் மே முதலாம் திகதி வரை வெப்ப அலை வீச வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெப்ப அலை தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட வானிலை முன்னறிவிப்பில் தமிழகத்துக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# போதையில்லா தமிழகம் உருவாக்கப்பட வேண்டும்



## தினகரன் கோரிக்கை

சென்னை, ஏப். 29

குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் இரும்புக்கரம் கொண்டு அடக்கி போதையில்லா தமிழகத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று

அ. ம. மு. க. பொதுச் செயலாளர் டி. டி. வி. தினகரன், தனது எக்ஸ் வலைத்தள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

பழனிச்சாமி ஆட்சிக்காலத்தில் குட்கா நடமாட்டம் அதிகமாக இருப்பதாகக் கூறி சட்டப் பேரவைக்கே குட்காவை எடுத்துச் சென்று குற்றஞ்சாட்டிய அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் மு. க. ஸ்டாலின், தற்போது முதல்வரான பின் போதை பொருட்கள் கடத்தல் மற்றும் விற்பனையைத் தடுக்கவோ, ஒழிக்கவோ எந்த நடவடிக்கையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை என்றும் போதையில்லா தமிழகத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

# முகமாலை மனித எச்சம்; இன்று அகழப்படுகின்றது!



**கிளிநொச்சி, ஏப். 29**
**முகமாலையில் சீருடையுடன் மனித எச்சங்கள் இனங் காணப்பட்ட இடம் இன்று திங்கட்கிழமை தோண்டப்பட வுள்ளது.**

பளை - முகமாலையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் கடந்த வியாழக்கிழமை பச்சை நிற சீருடையுடன் மனித எச்சங்களை இனங்கண்டனர்.

இது தொடர்பில் பளை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிபதி அங்கு சென்று ஆய்வு நடத்தினார். இதைத் தொடர்ந்து இன்றைய தினம் இந்த இடத்தை அகழுமாறு உத்தரவு பிறப்பித் திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# தமது அபிலாசைகளுக்கான அங்கீகாரத்தையே பொது வேட்பாளர் மூலம் தமிழர் கோருகின்றனர்

## சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 29
தமிழர்கள் தங்களது அபிலாசைகளுக்கான அங்கீகாரத்தை இந்த பொது வேட்பாளர் மூலம் கோருகின்றார்கள் எவன்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பொது வேட்பாளர் யார் என்பது முக்கியமல்ல. வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகள் இந்த பொது வேட்பாளர் மூலம் உலகறியச் செய்யப்பட வேண்டும். தமிழர்கள் தங்களது பாரம்பரிய பூமியில் இறைமையோடு வாழ்ந்தவர்கள். அவர்களுக்கு அவர்களது இறைமையை மீட்டுக் கொடுக்கும் வகையிலான சமஷ்டி தீர்வை இந்த பொது வேட்பாளர் முன்வைப்பார்.



தமிழர்களின் அரசியல் தீர்வுக்கான ஒருகளமாக நாங்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒருபொது வேட்பாளரை நிறுத்தி அவருக்கான ஆதரவைக் கேட் போம். எங்கள் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகவே பொது வேட்பாளர் களமிறக் கப்படுவதைத் தமிழர்கள் பார்க் கின்றார்கள்.

தமிழர் ஒருவர் ஜனாதிபதியாக அல்ல, துணை ஜனாதிபதியாகக் கூட தெரிவுசெய்யப் பட முடியாதென்பதை அறிந்தேதான் எல்லோரும் செயல்படு கின்றார்கள். இங்கு முக்கியமா னது தமிழர்கள் தங்களது அபி லாசைகளுக்கான அங்கீகா ரத்தை இந்த பொது வேட்பா ளர் மூலம் கோருகின்றார்கள் - என்றார். (ஐ)

# நாச்சிக்குடா அ. த. க. பாடசாலை என்பதே உத்தியோகபூர்வமானது

## வடக்கு கல்வி திணைக்களம் அறிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 29
கிளிநொச்சி - நாச்சிக்குடா அரசினர் தமிழ் கலவன் பாடசாலை பெயர் மாற்றம் காரணமாக சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, பழைய பெயரையே உத்தியோகபூர்வமாக பயன்படுத்துமாறு வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் பணித்துள்ளது.

நாச்சிக்குடா அரசினர் தமிழ் கலவன் பாடசாலை கடந்த 4 ஆண்டுகளாக நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை என்று பெயர் மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டது. இதனைத் திருத்துமாறு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்தப் பெயர் மாற்றம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் அறிக்கையும் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, “கிளிநொச்சி நாச்சிக்குடா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை” என்ற பெயரே உத்தியோகபூர்வமானது” என்று மாகாண கல்விப் பணிப்பாளர் குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

பாடசாலையின் தற்போதைய அதிபர், நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற இறப்பர் முத்திரையை பயன் படுத்தி க.பொ.த. சாதாரண தர பரீட்சை மாணவர்களின் அனுமதி அட்டைக்கு கையொப்பம் இட்டுள்ளமை தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# ஊடகவியலாளர் சிவராமுக்கு வவுனியாவில் நினைவேந்தல்!



வவுனியா, ஏப். 29
ஊடகவியலாளர் தராக்கி சிவராமின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வவுனியா ஊடக அமையத்தின் செயலாளரும் ஊடகவியலாளருமான பரமேஸ்வரன் கார்த்தீபன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் அன்னாரின் திருவுருவ படத்திற்கு ஒளிதீபம் ஏற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அவர் தொடர்பான நினைவுப் பேருரையை ஊடகவியலாளர் நடராசா ஜனகதீபன் நிகழ்த்தியிருந்தார்.

குறித்த நிகழ்வில் மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (ஐ)

# நண்பர்களின் மோதலால் தந்தை மீது வாள்வெட்டு!

## அச்சுவேலியில் பயங்கரம்

யாழ்ப்பாணம், ஏப். 29
நண்பர்கள் இருவரிடையே ஏற்பட்ட முரண்பாட்டால் வீடு ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில், அங்கிருந்த முதியவர் ஒருவர் வாள்வெட்டில் படுகாயமடைந்தார். அத்துடன், அங்கிருந்த வாகனமும் சேதப்படுத்தப்பட்டது.

சனிக்கிழமை நள்ளிரவை அண்டிய நேரத்தில் அச்சுவேலி - பத்தமேனி பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

வீட்டுக்குள் நுழைந்த குழுவினர் முன்புறம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கினர். அத்துடன், யன்னல் கண்ணாடிகளையும் நொறுக்கினர். பின்னர் அங்கிருந்த 70 வயது முதியவரையும் வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

வியாபாரம் சம்பந்தமாக நண்பர்கள் இருவரிடையே ஏற்பட்ட முரண்பாடே இந்தத் தாக்குதலுக்கு காரணம் என்று விசாரணையில் தெரிய வந்ததாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்ட நண்பர்கள் இருவரில் ஒருவர் வெளிநாடு செல்ல முயன்றார். அப்போது, தனது பாரவூர்தியை மற்றைய நண்பருக்கு அவர் விற்றுள்ளார். வெளிநாடு சென்றவர் வெளிநாடு செல்ல முடியாமல் மீண்டும் ஊர் திரும்பியுள்ளார்.

நண்பரிடம் விற்ற பாரவூர்தியை பணத்தை செலுத்தும் கால அவகாசத்துடன் மீளக் கேட்டுள்ளார். அவரும் அதனை வழங்கியுள்ளார். கால அவகாசம் முடிந்தும் பணத்தை அவர் வழங்கவில்லை. இதனால், பாரவூர்தியை மீளப் பெற்று வேறொரு தரப்புக்கு அவர் விற்பனை செய்துள்ளார்.

இதனால், ஆத்திரமடைந்த நபர் வாகனத்தை மீளப்பெற்று விற்பனை செய்தவரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தினார். அத்துடன், வீட்டிலிருந்த நண்பரின் தந்தையையும் வெட்டிக் காயப்படுத்தியுள்ளார்.

இந்தத் தாக்குதலை நடத்திய சகோதரர்கள் இருவரை அச்சுவேலி பொலிஸார் கைது செய்துள்ளனர். படுகாயமடைந்த முதியவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)



# நடுவீதியில் டிப்பர் கவிழ்ந்த விபத்தில் ஒருவர் படுகாயம்!

கொழும்பு, ஏப். 29
டிப்பர் வாகனத்தின் ரயர் திடீரென காற்றுப் போனதால் அது தடம்புரண்டதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஏ - 9 வீதியில் கிளிநொச்சி - பரந்தன் சந்தியை அண்மித்த பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 5. 40 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி கற்களை ஏற்றி வந்த டிப்பரே தடம்புரண்டது. இதில், டிப்பரில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்தார். எனினும், வாகனத்தில் பயணித்த ஏனையோர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

நடுவீதியில் கவிழ்ந்த டிப்பரால் சிறிது நேரம் ஏ-9 வீதி வழியான போக்குவரத்து தடைப்பட்டது.

கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# மே தினக் கூட்டங்களுக்காக ரூ. 100 கோடி செலவிட திட்டம்!

## கணிப்பில் வெளியானது தகவல்

கொழும்பு, ஏப். 29

**பிரதான அரசியல் கட்சிகள் தமது அதிகாரத்தை மக்களுக்கு வெளிப்படுத்தும் வகையில் மே தினக் கூட்டங்களில் அதிகம் மக்களை பங்குபற்ற செய்வதற்காக சுமார் ஆயிரம் மில்லியன் ரூபாயை செலவிடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.**

எதிர்வரும் தேர்தல்களை இலக்காகக் கொண்டு பிரதான அரசியல் கட்சிகள் மே தினக் கூட்டங்கள் மூலம் தமது அதிகபட்ச அரசியல் பலத்தை வெளிப்படுத்தும் வகையில் மே தினத்தில் இவ்வளவு பணத்தைச் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மே தின பேரணிகளில் பங்கேற்கும் தங்கள் கட்சி உறுப்பினர்களுக்கு பயண வசதி செய்து கொடுக்கவும், அவர்களுக்கு உணவு வழங்கவும் பேருந்துகளுக்கும் இவ்வளவு பெரிய தொகை செலவிடப்படும்.

இந்தத் தொகையுடன், மே பேரணி நடைபெறும் இடங்களில் பதாதைகள், சுவரொட்டிகள், கட்-அவுட் அலங்காரங்கள், மேடைகள், ஒலிபெருக்கிகள் அமைக்க பல இலட்சம் ரூபாயை அரசியல் கட்சிகள் செலவிடவுள்ளன.

கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் இருந்து அதிக எண்ணிக்கையிலான பேருந்துகள் கொழும்புக்கு வரவுள்ளன.

மேல் மாகாணத்திற்கு உட்பட்ட மாவட்டங்களில் இருந்து வரும் பேருந்துகளுக்கு ஒரு பேருந்துக்கு 30 ஆயிரம் முதல் 35 ஆயிரம் ரூபாய் வரையிலும், அநுராதபுரம் போன்ற தொலைதூரப் பகுதிகளில் இருந்து கொழும்பு வரும் பேருந்துக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரையிலும் கட்டணம் செலுத்த வேண்டும். ஒருவருக்கு மதிய உணவுக்கு 300 முதல் 450 ரூபாய் வரை செலவாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது

இதற்கு முக்கிய அரசியல் கட்சிகளிடம் இருந்து பெறப்படும் பணம் போதாது என்பதால், தொகுதி அமைப்பாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களிடம் பணம் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

# சொகுசு வாகனங்களை தவிர்க்கும் எம். பிக்கள்!

கொழும்பு, ஏப். 29

பொருளாதார சிக்கல்களால் கிட்டத்தட்ட 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய சொகுசு வாகனங்களை தவிர்த்து சிறிய ரக வாகனங்களை பயன்படுத்தி வருகின்றனர் என்று தெரிய வருகின்றது.

அதிக எரிபொருள் விலை, சேவைக் கட்டணம், பராமரிப்பு செலவுகளால் இவ்வாறு செய்துள்ளதாக தெரியவருகிறது. மேலும், அதிக எரிபொருள் செலவு காரணமாக, பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்பது மற்றும் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பதையும் மட்டுப்படுத்தியுள்ளனர்.

பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பேருந்துகள் மற்றும் ரயில்கள் போன்ற பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த விரும்புகின்றனர் என்றும் கூறப்பட்டது.

(ஐ)

# குடிதண்ணீர் வழங்கும் திட்டம் ஆரம்பித்துவைப்பு

வவுனியா, ஏப். 29

வவுனியா - கற்பகபுரம் கிராமத்தில் 130 குடும்பங்களுக்கு இலவச குடிதண்ணீர் வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானால் குறித்த திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன், சுயதொழில் ஊக்குவிப்பை மேம்படுத்தும் நோக்கோடு இருவருக்கு வாழ்வாதார உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பிரதேச செயலாளர், நீர்வழங்கல் சபையின் பொறியியலாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(ஐ)

# மாணவியை வீட்டுக்கு அழைத்த ஆசிரியர் கைது

ஹற்றன், ஏப். 29

ஹற்றன் - கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதான பாடசாலை ஆசிரியர் ஒருவர் சனிக்கிழமை கினிகத்தேனை பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பாடசாலையில் 11ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவியை அவரது வீட்டுக்கு அழைத்தார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஆசிரியர் தற்போது பணிபுரியும் பாடசாலைக்கு வருவதற்கு முன்னர் இந்த மாணவி கல்வி பயிலும் பாடசாலையில் பல வருடங்கள் பணியாற்றியுள்ளார் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மேலதிக வகுப்பு முடிவடைவதற்குத் தாமதமானதால் தான் ஆசிரியரின் வீட்டுக்குச் சென்றார் என்றும், தான் அங்கு சென்றபோது ஆசிரியர் தன்னுடன் தவறாக நடந்து கொள்ளவில்லை எனவும் பாடசாலை மாணவி பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

பாடசாலை மாணவி மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ஐ)

# இறப்பு எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 29

2020 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் வருடாந்த பிறப்புகளின் எண்ணிக்கை குறைவதோடு இறப்பு எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்று பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் நாயகம் லக்ஷிகா கணேபொல தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் சுமார் 3 இலட்சத்து 25 ஆயிரமாக இருந்த வருடாந்த பிறப்பு எண்ணிக்கை தற்போது 2 இலட்சத்து 80 ஆயிரமாக குறைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வருடாந்த இறப்பு எண்ணிக்கை ஒரு இலட்சத்து 40 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சத்து 80 ஆயிரமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலைமை சனத்தொகை அதிகரிப்புக்கு பாதகமான பாதிப்பை ஏற்படுத்தும் என பதிவாளர் நாயகம் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

# சுற்றுலா பயணிகளால் சீர்கேட்டில் நுவரெலியா

நுவரெலியா, ஏப். 29

நாட்டின் மிக முக்கியமான சுற்றுலா நகரமாக விளங்கும் நுவரெலியாவின் பல இடங்கள் குப்பைகள், கழிவுகளால் அசுத்தமாகி, சுகாதார சீர்கேட்டை எதிர்கொண்டு வருகின்றன.

நாட்டின் பிரசித்தி பெற்ற சுற்றுலா தளங்களில் முக்கியமான நுவரெலியாவுக்கு ஆண்டுதோறும் ஏப்ரல் மாதத்தில் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருவது வழக்கமாகும். சர்வதேச அளவில் புகழ்பெற்ற இந்தச் சுற்றுலா நகரில் சுகாதார நிலை பாதிக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக நுவரெலியா நகரின் பல இடங்களில் போதிய குப்பைத் தொட்டிகள் வைக்கப்படாதமையால் கண்ட இடங்களில் குப்பைகள் வீசப்படுகின்றன. இதனால் நகரம் அசுத்தப்பட்டு வருவதோடு, சுகாதார சீர்கேடும் உருவாகியுள்ளது.

மேலும், அங்கே சுகாதாரத்தை பேணும் வகையிலான அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதில் நுவரெலியா மாநகர சபை சற்று பின்தங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

நுவரெலியாவுக்கு வரும் சுற்றுலா பயணிகளில் பெரும்பாலானவர்கள் ஹோட்டல்கள், உணவு விடுதிகளுக்கு சென்று



உணவு சாப்பிடுவதை தவிர்த்துவிட்டு, உணவை சமைத்து எடுத்துக்கொண்டு வாகனங்களில் வருகின்றனர்.

இவ்வாறு வருபவர்கள் நுவரெலியா பிரதான நகர், ஹக்கல பூங்கா, விக்டோரியா பூங்கா, கிறகறி வாவி கரை போன்ற பகுதிகளில் வீதியோரங்களிலும் புல்வெளிகளிலும் மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகளிலும் தங்களது வாகனங்களை நிறுத்தி சாப்பிடுகின்றனர்.

இவர்கள் சமைத்துவிட்டு அல்லது கொண்டுவந்த உணவை சாப்பிட்டு முடித்துவிட்டு, எஞ்சிய உணவுக் கழிவுகள், மாமிசங்கள், எலும்புத்துண்டுகள், பிளாஸ்டிக் குடிநீர் போத்தல்கள், எளிதில் மக்கிப்போகாத பொலித்தீன் பைகளில் கட்டப்பட்ட சில கழிவுப்பொருட்களை அதே இடங்களில் வீசிவிட்டுச் செல்கின்றனர்.

எனவே, இந்த இடங்களில் குப்பைத் தொட்டிகளை வைப்பதுடன், சீரான முறையில் கழிவகற்றல் பொறிமுறையை வகுக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ)

# போதை மாத்திரைகளுடன் இளைஞர் வவுனியாவில் கைது!

வவுனியா, ஏப். 29

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் 70 போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா கலந்த மாவாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் திடீர் சோதனை முன்னெடுக்கப்பட்டபோது அப்பகுதியில் உள்ள சிறிய கடை ஒன்றில் வைத்து போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா கலந்த மாவா விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்போது, குறித்த கடையில் இருந்து 70 போதை மாத்திரைகளை பொலிஸார் கைப்பற்றியதுடன் கஞ்சா கலந்த மாவாவும் மீட்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த வியாபார நிலைய உரிமையாளரான மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ)

# கரைதுறைப்பற்றில் படைகளுக்கு காணி சுவீகரிக்க நடவடிக்கை!

முல்லைத்தீவு, ஏப். 29

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசத்தில் இராணுவத்தின் தேவைக்காக காணிகளை சுவீகரிப்பு செய்வதற்கான அளவீட்டு பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அளவீட்டு பணிகள் எதிர்வரும் மே 2ஆம் ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் அளம்பில் தெற்கு கிராமத்தில் 2.0234 ஹெக்ரெயர் அளவு கொண்ட நிலப்பகுதியில் இலங்கை இராணுவத்தின் 24 ஆவது சிங்க றெஜிமன்ட் காணி அமைந்துள்ளது. இந்தக் காணியையே சுவீகரிப்பதற்காக நில அளவைத் திணைக்களத்தினர் எதிர்வரும் 2ஆம் திகதி அளவீடு செய்யவுள்ளனர் என்று தெரிய வருகின்றது. (ஐ)

# பொலிஸாருக்கு ஒன்லைன் மூலம் முறையிடும் முறைமை விரைவில்

கொழும்பு, ஏப். 29

**ஒன்லைன் தொழில்நுட்பத்தின் மூலம் பொதுமக்கள் முறைப்பாடுகளை வழங்கினால் முறைப்பாட்டாளர் இருக்கும் இடத்துக்கு உடனடியாக பொலிஸ் குழுக்களை அனுப்பி முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை மேற் கொள்ளும் புதிய முறையை அறிமுகப் படுத்த பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.**

இந்த நடவடிக்கை வார நாட்களில் அமுல்படுத்தப்படவுள்ளதுடன், இனிமேல், பொது மக்கள் முறைப்பாடுகளை வழங்க பொலிஸ் நிலையங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை என பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளை வநடட பைி (ரெல் ஐ. ஜி பி. ) என்ற பொலிஸ் இணையதளம் ஊடாக வழங்கினால் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களிலுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு முறைப்பாடுகள் கிடைக்கும்.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் ஆலோசனையின் பேரில் கொழும்பு மாவட்டத்தில் இந்த நடவடிக்கை முதலில் ஆரம்பிக்கப்படுள்ளதுடன், 22 பொலிஸ் நிலையங்களிலும் இந்த புதிய முறையை அறிமுகப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியா உட்பட பல நாடுகளில் இந்த நடவடிக்கையானது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் ஒன்லைன் மூலம் முறைப்பாடுகளை வழங்கினால் முறைப்பாடுகள் முறையாக விசாரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## குற்றச்செயலில் ஈடுபடச் சென்ற 5 பாதாள உலகக் குழுவினர் கைது!

கொழும்பு, ஏப். 29

குற்றச் செயலில் ஈடுபடுவதற்காக வான் ஒன்றில் சென்ற பாதாள உலக குழுவுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஐந்து பேர் கைதாகினர். அவர்களிடம் இருந்து கைக்குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றச் செயல்களில் ஈடுபடத் தயாரான இவர்கள் தொடர்பில் மாதம்பை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பயணித்த வானை பொலிஸார் சோதனையிட்ட போது 6 கூரிய வாள்கள், 3 நீளமான கைக் கத்திகள், மற்றும் 54 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு மாதம்பை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (ஐ)

## இளைஞர்களை அதிக பங்கேற்பாளராக எமது ஆட்சியில் மாற்றிக்காட்டுவோம்

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 29

நாட்டின் இளைஞர்களை ஒன்றிணைத்து அவர்களை ஆட்சியில் அதிக ஈடுபாட்டுடன் பங்கேற்பவர்களாக மாற்றப்படுவார்கள் - இந்தத் திட்டம் எமது ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாட்டின் இளைஞர்களை ஒன்றிணைத்து அவர்களை ஆட்சியில் கூடிய ஈடுபாட்டுடன் பங்கேற்பவர்களாக மாற்றப்படுவார்கள். ஆட்சி அதிகாரம் கிடைத்தவுடன் “ப்ரோஜக்ட் யூத்“ திட்டத்தின் மூலம் இளைஞர்களை கட்டியெழுப்புவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.



கேகாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமூகத்தில் பலர் வாக்குறுதி அரசியலை ஏற்றுக்கொள்வதில்லை. அதிகாரம் கிடைப்பதற்கு முன் கொடுத்த வாக்குறுதிகளை அதிகாரம் கிடைத்த பிற்பாடு மீறுவதை இங்கு குறிப்பிடுகிறேன்.

பல தசாப்தங்களாக இந்த வாக்குறுதிகள் மீறப்பட்ட போதிலும் ஐக்கிய மக்கள் சக்தி தனக்கும் தொடர்ச்சியான வாக்குறுதிகளை வழங்க முடியும் போலவே இளைஞர்களுடன் தெளிவான சமூக ஒப்பந்தத்திற்கு செல்ல முடியும்.

காரணம், தானும் தனது குழுவினரும் வாக்குறுதியளித்த பிரகாரம் அரச அதிகாரத்தைப் பெறுவதற்கு முன், இந்நாட்டின் ஜனநாயக வரலாற்றில் முதன்முறையாக, அரச அதிகாரம் இல்லாமல், பிரபஞ்சம், மூச்சுத் திட்டங்களின் மூலம் கல்வி, சுகாதார துறைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தோம். - என்றார்.

(ஐ)

## பாடசாலைக்கு சென்ற மாணவியை காணவில்லை என்று முறைப்பாடு!

சாவகச்சேரி, ஏப். 29

கச்சாயில் பாடசாலைக்கு சென்ற 15 வயது மாணவி ஒருவர் வீடு திரும்பவில்லை என நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் மாணவியின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சனிக்கிழமை காலை சாவகச்சேரியில் அமைந்துள்ள பாடசாலைக்கு செல்வதாக வீட்டில் கூறிச் சென்ற மாணவி இரவாகியும் வீடு திரும்பாத காரணத்தால் மாணவியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

சாவகச்சேரி கச்சாய் வீதியை சேர்ந்த மாணவியே காணாமல் போயுள்ளார். மாணவி காணாமல் போனமை தொடர்பாகக் கிடைத்த முறைப்பாட்டை அடிப்படையாக வைத்து சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## 450 சி. சிக்கு மேல் வலு சக்தி கொண்ட மோட்டார் வாகனங்களை பதியப்படும்!

கொழும்பு, ஏப். 29

450 சி. சிக்கு மேற்பட்ட இயந்திர வலு கொண்ட 10 ஆயிரம் மோட்டார் வாகனங்களை பதிவு செய்ய மோட்டார் போக்குவரத்து திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இதற்காக போக்குவரத்து அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு இணைந்து அமைச்சரவை அறிக்கையை தயாரித்துள்ளதுடன், இந்த அறிக்கையானது சில வாரங்களில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுங்க வரி செலுத்தாமல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட பதிவு செய்யப்படாத 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் காணப்படுகின்றன என்று தெரிய வந்துள்ளது.

(ஐ)

## அம்புலன்ஸ் சாரதி; 300 வெற்றிடங்கள்

கொழும்பு, ஏப். 29

இந்த நாட்டில் அரச மருத்துவமனை அமைப்பில் அம்புலன்ஸ் சாரதிகளுக்கு பற்றாக்குறை காணப்படுவதாக அரச சுகாதார சேவை அம்புலன்ஸ் சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அம்புலன்ஸ் சாரதிகளுக்கு சுமார் 300 வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்றும் அம்புலன்ஸ் சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

## 37 கிலோ தங்கம் கொள்ளை

## ஐவரை கைது செய்வதற்கு மக்களை நாடும் பொலிஸ்






கற்பிட்டியில் 37 கிலோ தங்கம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வரும் சந்தேக நபர்கள் ஐவரை கைது செய்வதற்கு பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் கற்பிட்டி பிரதேசத்தில் நபர் ஒருவரை கடத்தி 37 கிலோ தங்கம் கொள்ளை தொடர்பான வழக்கு கற்பிட்டி நீதிவான் நீதிமன்றில் நடக்கிறது. இந்த வழக்குடன் தொடர்புடைய ஐவரும் தலைமறைவான நிலையில் அவர்களை கைது செய்ய பொலிஸார் மக்களின் உதவியை நாடியுள்ளனர்.

மேலும் சந்தேகநபர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 071 859 1763 அல்லது 071 859 4916 என்ற கைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.(ஐ)

## குடிவரவு அதிகாரிகளிடமிருந்து தப்பிய எகிப்தியர் சிக்கினார்!

கொழும்பு, ஏப். 29

வீசா இல்லாது கைதான எகிப்திய பிரஜை ஒருவர் தப்பிச் சென்ற நிலையில் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாட்டை விட்டு இவரை வெளியேற்றும் வரை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 13ஆம் திகதி தப்பி சென்றிருந்தார்.

இவ்வாறு, தப்பிச் சென்ற எகிப்தியர் கண்டி பிரதேசத்தில் உள்ள ஏ. ஏ. தர்மசேன மாவத்தையில் அமைந்துள்ள விடுதியொன்றில் தங்கியுள்ளார் என்று குடிவரவு - குடியகல்வு புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

(ஐ)

## பூ விற்பனை செய்வதாக நடித்து ஹெரோயின் விற்ற பெண் கைது!

கொழும்பு, ஏப். 29

பூ விற்பனை செய்தவாறு ஹெரோய்ன் போதைப்பொருள் விற்பனை செய்ததாக கூறப்படும் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் பூக்களுக்கு அடியில் வைத்து தனக்குத் தெரிந்த வாடிக்கையாளர்களுக்கு ஹெரோய்ன் போதைப்பொருள் விற்பனை செய்தது பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த பெண் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். இவரின் மகன்மார் இருவரும் ஏற்கனவே போதைப்பொருள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழரின் இருப்பை வலுப்படுத்த தமிழ் பொது வேட்பாளர் அவசியம்

## திருமலை ஆயர் நோயல் இமானுவல்

**திருகோணமலை, ஏப். 29**

**தமிழ் மக்களின் இருப்பை வலுப்படுத்துவதற்கு தமிழ் பொது வேட்பாளர் அவசியம் என்று திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இமானுவல் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**



மக்கள் மனு சிவில் சமூக குழுவின் கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஒற்றுமையோடு ஒரு கோட்பாட்டுக்குள் பயணிப்பதற்கு தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயம் ஒரு சிறந்த சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# வாகரை பிரதேசத்தை அழிக்கும் செயல்பாட்டில் அரசியல்வாதிகள்

## ஆளுநருடனான சந்திப்பில் மக்கள் சாடல்

மட்டக்களப்பு, ஏப். 29

எமது வாக்குகளால் மக்கள் பிரதிநிதிகளானவர்கள் இன்று வாகரை பிரதேசத்தை அழிக்கும் வகையிலான செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர் என்று வாகரை பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானுடனான நேற்றைய சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

அத்துடன், வாகரை பகுதியில் இல்மனைட் அகழ்வு மற்றும் இறால் பண்ணை திட்டங்களுக்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று கோரி வாகரை பிரதேச மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிலையிலேயே இந்த சந்திப்பு நடைபெற்றது.

மேலும், கிழக்கு மாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை நோக்காக கொண்டு முன்னெடுக்கப்படும் செயல்பாடுகளை எந்த தடைகள் வந்தாலும் முன்கொண்டு செல்வேன் எனவும் மக்களுக்கு தீங்கான எந்த திட்டங்கள் வந்தாலும் அதனை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று ஆளுநர் செந்தில் தொண்டமான் இதன்போது உறுதியளித்தார்.

# புத்தாண்டு, நோன்பு பெருநாளையொட்டி வளத்தாப்பிட்டியில் விளையாட்டு விழா!



அக்கரைப்பற்று, ஏப். 29

சமுர்த்தி தேசிய கொண்டாட்ட மாதம், தமிழ் - சிங்கள புத்தாண்டு மற்றும் நோன்பு பெருநாள் விளையாட்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை ஹூதா வங்கி முகாமையாளர் எம்.ஐ.எம் முஜீப் தலைமையில் வளத்தாப்பிட்டி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ். எல். முஹம்மது ஹனீபா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்த விளையாட்டு விழாவில் பல்வேறுபட்ட கிராமிய விளையாட்டு நிகழ்வுகளும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

# சாய்ந்தமருதில் விளையாட்டுவிழா!



சாய்ந்தமருது, ஏப். 29

சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி, சாய்ந்தமருது பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் தமிழ் - சிங்கள புத்தாண்டு மற்றும் நோன்புப் பெருநாளை முன்னிட்டு ஸ்மார்ட் யூத் கிராமிய விளையாட்டு விழா சாய்ந்தமருது பௌசி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம் எம் ஆஷிக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீஸன், மற்றும் அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.ஏ. சி. அஹமட் சாபிர் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதில் பல்வேறு கிராமிய விளையாட்டுக்கள் நடைபெற்றதுடன் வெற்றியாளர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# ஆளுநர் தொண்டமானுக்கு முஸ்லிம் காங்கிரஸ் பாராட்டு

திருகோணமலை, ஏப். 09

கிழக்கு மாகாண ஆளுநரின் அர்ப்பணிப்புகளை பாராட்டுவதாகவும் சேவைகளை வாழ்த்துவதாகவும் அனுபவமும் ஆற்றலும் மிக்க ஒருவரே கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் என சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினருமான எம். எஸ் தௌபீக் தெரிவித்தார்.



நேற்று அவர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செந்தில் தொண்டமான் சகோதர இனத்தவராக, வெளி மாகாணத்தை சேர்ந்தவராக இருந்த போதிலும், மூவின மக்களுக்கும் சிறப்பாக சேவையாற்றும் சிறந்த ஆளுநராக திகழ்கிறார். அரசியல்வாதிகளுடனும் பொதுமக்களுடனும் அரசு அதிகாரிகளுடனும் சிறந்த தொடர்பை ஏற்படுத்தி சிறந்த முறையில் பணியாற்றுகின்றார்.

மக்கள் பிரச்னைகளை அவரது கவனத்துக்குக் கொண்டு செல்கையில் உரிய அதிகாரிகளுடன் பேசி மிக விரைவில் அதற்கான தீர்வை பெற்றுத்தருவது அவரின் ஆளுமையை வெளிப்படுத்துகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு சமூக, பொருளாதார பிரச்னைகளை தீர்பதற்கு ஆளுநர் தனக்கு உதவுதாகவும், ஆளுநருடன் இணைந்து மேலும் பல அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் தெரிவித்தார். (ஐ-04)



# விவசாய நிலங்களை குத்தகைக்கு வழங்கும் திட்டத்துக்கு எதிர்ப்பு!

திருமலை, ஏப். 29

திருகோணமலை - முத்து நகர் பிரதேச விவசாயிகளின் நிலங்களை தனியார் நிறுவனங்களுக்கு நீண்டகால குத்தகைக்கு கொடுக்கும் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நீண்ட காலமாக வாழ்ந்து வரும் தமக்கு குடியிருப்புக்களையும் விவசாய நிலங்களையும் விட்டு வெளியேறுமாறு துறைமுகங்கள் அதிகார சபை அதிகாரிகள் கூறிவருகின்றனர்.

இவ்வாறு கூறி வருவதனை அடுத்து அக்கிராம மக்கள் சுமார் 800இற்கும் மேற்பட்டோர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்து கொண்டனர்.

முத்துநகர் ஆர். டி. எஸ். கட்டடத்தில் இருந்து ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டம் வயல் நிலம் வரை சென்றடைந்து பின்னர் மீண்டும் ஆரம்பித்த இடத்தை வந்தடைந்தது.

இந்தியாவில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு தாங்கள் வாழுகின்ற பூமியை கொடுப்பதற்கு திட்டமிட்டு வருவதாக மக்கள் சாடியுள்ளனர்.

இக்கிராமத்தில் சுமார் 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றனர். 340 விவசாயக் குடும்பங்கள் வாழ்கின்றனர். சுமார் 800இற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பை கொண்டுள்ளது. (ஐ)

# மனநலம் பாதிக்கப்பட்டவர் தாக்கியதில் ஒருவர் காயம்!

மட்டக்களப்பு, ஏப். 29

மனநலம் பாதிக்கப்பட்டவரின் தாக்குதலில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வாழைச்சேனை - மீராவோடையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மனநலம் பாதிக்கப்பட்டவரின் அருகே ஒருவர் நின்றபோது, அவரை தான் வைத்திருந்த கத்தரிக்கோலால் திடீரென குத்தியுள்ளார்.

இதில் முதுகில் காயமடைந்த நபர் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# நாவிதன்வெளி பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு!

அக்கரைப்பற்று, ஏப். 29

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பின எச். எம். எம். ஹரீஸின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நாவிதன்வெளி பிரதேச பள்ளிவாசல்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளன.

இதற்கான ஆவணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும் பிரதேச அமைப்பாளருமான ஏ. சி. ஏ. நலார் ஹாஜி, நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.பி நவாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)



# “கெஜ்ரிவால் பதவியில் நீடிக்க அதிகார மோகமே காரணம்”

டில்லி, ஏப். 29

அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்ட பின்னரும் டில்லி முதல்வராக நீடிப்பதற்கு பதவி மோகமும் மக்கள் பணத்தில் கட்டப்பட்ட பங்களா மீதான மோகமுமே காரணம் என்று பா. ஜ. க. விமர்சித்துள்ளது.

டில்லி மதுபானக் கொள்கை ஊழல் வழக்கில் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் கடந்த மார்ச் 21 ஆம் திகதி சட்ட அமுலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டார். அவர் தற்போது டில்லி திஹார் சிறையில் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அரவிந்த் கெஜ்ரிவாலும் அவரது அரசும் நீதிமன்றத்தால் அம்பலப்படுத்தப்பட்டுள்ளனர். அரசு ஊழியராக இருந்தாலும் ஒரு வழக்கில் கைது செய்யப்பட்டால், 48 மணி நேரத்துக்குள் அவரது இராஜினாமா பெறப்படும். ஆனால் அரவிந்த் கெஜ்ரிவால் முதல்வராக இருந்து இன்னும் அரசை நடத்துவது வெட்கக்கேடானது. - இவ்வாறு டில்லி பா. ஜ. க. தலைவர் வீரேந்திர சச்தேவா விமர்சித்துள்ளார்.

முதல்வர் பதவியை அவர் தார்மீக அடிப்படையில் உடனடியாக இராஜினாமா செய்திருக்க வேண்டும். ஆனால் பதவி மோகமும் மக்கள் செலுத்திய வரிப் பணத்தில் கட்டிய பங்களா மீதான மோகமும் அவரைப் பதவியை விட்டு வெளியேற அனுமதிக்கவில்லை.- என்றார். (எ)

# ஹமாஸுக்கு கடைசி வாய்ப்பு காஸாவில் மீள போர் பதற்றம்

டெல் அவிவ், ஏப். 29

காஸாவின் தெற்குப் பகுதியில் இஸ்ரேல் எல்லைக்கு மிக அருகில் அமைந்துள்ள ரஃபா நகரில் தரைவழித் தாக்குதலை இஸ்ரேல் ஆரம்பிக்கவுள்ள நிலையில், பணயக் கைதிகளை விடுவிக்க ஹமாஸுக்கு கடைசி வாய்ப்பு வழங்கப்படுவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. இதனால் காஸாவில் மீண்டும் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

காஸாவின் வடக்கு, மத்திய பகுதிகளில் தரைவழித் தாக்குதல் நடத்தியதுபோன்று தற்போது தெற்கிலுள்ள ரஃபா எல்லையில் தாக்குதல் நடத்த இஸ்ரேல் தீவிரம் காட்டி வருகிறது. இதனையொட்டி பணயக் கைதிகளை விடுவிக்க ஹமாஸ் படைகளுக்கு இதுவே கடைசி வாய்ப்பு என்று இஸ்ரேல் அறிவித்துள்ளதாக ரைம்ஸ் ஆஃப் இஸ்ரேல் பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது.

இந்தச் சூழலில், கடைசி கட்டப் பேச்சுக்களில் இஸ்ரேல் - எகிப்து உயர்மட்ட அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். பணயக் கைதிகள் விடுதலை தொடர்பில் ஆலோசனைக்காக எகிப்து குழுவினர் இஸ்ரேல் வந்துள்ளனர். ரஃபாவில் தரைவழித் தாக்குதலைத் தொடங்க வேண்டாம் என எகிப்து தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. காஸா மீதான தாக்குதலால் வடக்கு, மத்திய பகுதிகளிலிருந்து பெரும்பாலானோர் ரஃபா எல்லையில் தஞ்சமடைந்துள்ளனர். அங்கே தரைவழித் தாக்குதல் நடத்துவது மிகப்பெரிய அளவில் மனித உயிர் சேதத்தை ஏற்படுத்தும் என்று எச்சரித்துமுள்ளது,

ஆனால், ரஃபா தாக்குதலில் இஸ்ரேல் நாளுக்கு நாள் கூடுதலாக ஆர்வம் காட்டி வருகிறது. முன்னதாக, கடந்த மார்ச் 15 ஆம் திகதி, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அலுவலகம் வெளியிட்ட செய்தியில் ரஃபாவில் இராணுவ தாக்குதலுக்கு பிரதமர் ஒப்புதல் அளித்துவிட்டார் எனத் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், ஹமாஸை வெற்றி கொள்ள ரஃபா எங்களுக்குத் தேவை. ரஃபாவில் பதுங்கியுள்ள ஹமாஸ்களை அழிக்காமல் அது சாத்தியப்படாது. அது நிச்சயம் நடக்கும். அதற்கு ஒரு நாள் குறிக்கப்பட்டுள்ளது என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்தார். இதனால் காஸாவில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது. (எ)



# 174 வருடங்களில் பதிவாகாத அளவில் உச்சம் தொட்ட புவியின் வெப்பநிலை

வாஷிங்டன், ஏப். 29

கடந்த 174 வருடங்களில் பதிவாகாத அளவில் இந்த வருடத்தில் புவியின் வெப்பநிலை அதிகரித்துள்ளது. அத்துடன் 65 ஆண்டுகளின் பின்னர் கடலின் வெப்பநிலையும் அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் உலக வானிலை அமைப்பு தெரிவித்துள்ளது.

2027ஆம் ஆண்டுக்குள், புவியின் சராசரி வெப்பநிலை 1. 5 டிகிரி செல்சியஸுக்கு அதிகமாக உயர்வடைவதற்கு 66 வீத வாய்ப்புக்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெப்பநிலை வேகமாக அதிகரிக்கும் பட்சத்தில்

WORLD METEOROLOGICAL ORGANIZATION

பனிப்பாறைகள் உருகுவதும் அதிகரிக்கும்.

அத்துடன் கடல் மட்டமும் வேகமாக உயரக்கூடிய அபாயம் உள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் மே மாதம் வரையில் அதிகமான வெப்பநிலை பதிவாகும் எனவும், எல் நினோ உச்சத்தை அடைய வாய்ப்புள்ளதாகவும் அமெரிக்க தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்த வெப்பநிலை உயர்வு என்பது எதிர்வரும் காலங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# மணிப்பூரில் வன்முறை: மூவர் பலி! பலர் காயம்

இம்பால், ஏப். 29

இந்தியாவின் மணிப்பூர் மாநிலம் விஷ்ணுபூர் மாவட்டம் நரண்சீனா கிராமத்தில் ரிசர்வ் பட்டாலியன் (ஐ. ஆர். பி) முகாமுள்ளது. இதன் அருகே மக்களவைத் தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள சி. ஆர். பி. எப். வீரர்களுக்கான முகாமுள்ளது.

இந்நிலையில், நள்ளிரவில் மர்ம நபர்கள் சிலர் மலையிலிருந்தபடி துப்பாக்கிச்சூடு நடத்தினர். சிலர் முகாம் மீது வெடிகுண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 2 சி. ஆர். பி. எப். வீரர்கள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இதனிடையே, இம்பால் கிழக்குப் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் ஒருவர் உயிரிழந்தார்.

மணிப்பூரில் மைதேயி, குகி சமுதாயத்தினர் இடையே மோதல் நிகழ்ந்து வருகிறது. இந்நிலையில் தேர்தலை சீர்குலைக்க தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர். (எ)

# ரஷ்யாவிலிருந்து இந்தியா பயணித்த கப்பல் மீது தீவிரவாதிகள் தாக்குதல்

மொஸ்கோ, ஏப். 29

ரஷ்யாவிலிருந்து இந்தியா நோக்கிப் பயணித்த எண்ணெய்க் கப்பல் மீது ஹவுதி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

மத்திய கிழக்குப் பகுதியில் கடந்த சில மாதங்களாகவே பதற்றம் நீடித்து வருகிறது. இந்நிலையில் காஸாவிலுள்ள ஹமாஸ் தீவிரவாதிகள் மீது இஸ்ரேல் இராணுவத்தினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். கடந்த சில மாதங்களாகவே இந்தத் தாக்குதல் சம்பவங்கள் நடந்து வருவதால் அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.

மேலும், காஸா மீதான இஸ்ரேல் போருக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பலஸ்தீனியர்களுக்கு ஆதரவாகவும், செங்கடல் வழியாக செல்லும் வணிகக் கப்பல்களைக் குறிவைத்து ஏமனிலுள்ள ஹவுதி தீவிரவாதிகள் தொடர்ச்சியாகத் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கடல் பகுதியில் செல்லும் பல நாட்டு கப்பல்கள் மீது ட்ரோன்கள் மூலம் குண்டு வீசியும் ஏவுகணை வீசியும் தாக்குதல் நடத்திவருகின்றனர். இந்நிலையில் செங்கடல் வழியாக ரஷ்யாவிலிருந்து இந்தியா நோக்கிப் பயணித்த எண்ணெய்க் கப்பல் மீது ஹவுதி படையினர் தாக்குதல் நடத்தினர்.

ஆண்ட்ரோமெடா ஸ்டார் என்ற பெயருடைய இந்தக் கப்பல் ரஷ்யாவின் பிரிமோர்ஸ்க் பகுதியிலிருந்து புறப்பட்டுள்ளது. செங்கடல் பகுதியில் இந்த எண்ணெய்க் கப்பல் வந்தபோது தாக்குதல் நடத்தியதாக ஏமனின் ஹவுதி படையினர் தெரிவித்தனர்.

பனாமா கொடியுடன் வந்துகொண்டிருந்த இந்தக் கப்பல் பிரிட்டன் நாட்டுக்குச் சொந்தமானது என்று ஹவுதி செய்தித் தொடர்பாளர் யாஹ்யா சாரியா தெரிவித்தார். ஆனால் அண்மையில்தான் இந்த கப்பலை பிரிட்டன் விற்பனை செய்ததாகவும், தற்போது அதன் உரிமையாளர் சீஷெல்ஸில் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த எண்ணெய்க் கப்பல் இப்போது ரஷ்யாவுடன் தொடர்புடைய வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. (எ)



# தெலுங்கு தேசம் பிரசார வாகனத்துக்கு தீ வைப்பு

திருப்பதி, ஏப். 29

தெலுங்கு தேசம் கட்சியின் பிரசார வாகனம் இனந்தெரியாத நபர்களால் பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் தேர்தல் நெருங்க, நெருங்க அரசியல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. வேட்பு மனுத் தாக்கலின் போதே ஒய். எஸ். ஆர். காங்கிரஸார், தெலுங்கு தேசம் கட்சியினர் மீது பயங்கரத் தாக்குதல் நடத்தினர். சில வேட்பாளர்கள் தங்களுக்கு கொலை மிரட்டல் வருவதாகவும் தேர்தல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில், திருப்பதியை அடுத்த வால்மீகிபுரம் மண்டலம், விட்டாலம் எனும் இடத்தில் அதிகாலைவேளை வீதியின் ஓரத்தில் தெலுங்கு தேசம் கட்சியின் பிரசார வாகனத்தை நிறுத்திவிட்டு அதன் சாரதி தூங்கிக் கொண்டிருந்தார். இதன்போதே வாகனத்துக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. (எ)

# பஸில் கூறுவதற்கேற்ப ஆட நான் பொம்மை இல்லை!

## விஜயதாஸ ராஜபக்ஷ

கொழும்பு, ஏப். 29

**பஸில் ராஜபக்ஷ கூறுவதற்கேற்ப ஆட நான் ஒன்றும் பொம்மை கிடையாது என்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நான் நியமிக்கப்பட்டமை குறித்து பஸில் ராஜபக்ஷ பெரும் ஆத்திரம் கொண்டுள்ளார். இதன் காரணமாக என்னை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்குவதற்கு அவர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

எனினும், அவர் நினைப்பதை போன்று நான் ஒன்றும் சிறுபிள்ளை கிடையாது. நான் விஜயதாஸ ராஜபக்ஷ அதுவும் சட்டத்தை நன்றாக அறிந்த நீதி அமைச்சர்.

அதே போன்று பஸில் ராஜபக்ஷ கூறுவதற்கு ஏற்ப ஆட நான் ஒன்றும் பொம்மையும் கிடையாது.

எனவே பஸில் அவரால் முடிந்ததை செய்து கொள்ளட்டும். அதனை நீதிமன்றத்தில் சந்திக்க நான் தயாராகவே இருக்கின்றேன். இதே போன்று சுதந்திர கட்சியின் நிறைவேற்று குழு ஒன்று கூடியே என்னை பதில் தலைவராக நியமித்துள்ளது.

அந்த விடயம் சட்டபூர்வமாகவே நடைபெற்றுள்ளது. அதனையும் யாரும் கேள்விக்குட்படுத்த முடியாது என தெரிவித்துள்ளார்.

(ஐ)

# வெளிநாடு சென்று வாழும் அவசியம் எனக்கு இல்லை!

## மைத்திரிபால சிறிசேன



கொழும்பு, ஏப். 29

தென்கொரியாவுக்கோ அல்லது உலகின் வேறு எந்த நாடுகளுக்கோ சென்று வாழ வேண்டிய அவசியம் தனக்கு இல்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லவுள்ளார். அவர் தென்கொரியாவுக்கு சென்று வாழப் போகிறார் என்று செய்திகள் வெளியான நிலையில், இதனை அவர் மறுத்துள்ளார்.

(ஐ)

# பல்கலைக்கழக ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புக்கு முடிவு

கொழும்பு, ஏப். 29

அனைத்து பல்கலைக்கழகங்களிலும் தொடர்ச்சியான தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட கல்விசாரா ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர் என்று பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க போராட்டம் மே 2 ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்று ஒன்றியத்தின் இணைத்தலைவர் தம்மிக்க எஸ். பிரியந்த தெரிவித்துள்ளார்.

இதனால், பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள் தடைப்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# ஆட்கள் கடத்தலை தடுப்பதற்கு இலங்கைக்கு சிறப்பு விமானம்

## அன்பளிப்பாக வழங்குகிறது ஆஸி

கொழும்பு, ஏப். 29

சட்டவிரோத குடியேற்றங்கள் மற்றும் ஆள் கடத்தல் என்பவற்றை தடுப்பது உள்ளிட்ட இலங்கையின் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு சிறப்பு கண்காணிப்பு விமானத்தை அன்பளிப்பாக வழங்க அவுஸ்திரேலியா தீர்மானித்துள்ளது.

அவுஸ்திரேலிய வெளிநாட்டலுவல்கள் மற்றும் வர்த்தக திணைக்களத்தின் (தெற்கு மற்றும் தென்கிழக்காசிய பகுதி) பிரதி செயலாளர் மிச்சேல் சங் இதற்கான இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளார்.

மிச்சேல் சங்கின் அண்மைய இலங்கை பயணத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்கவை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன்போது ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமையவே சிறப்பு கண்காணிப்பு விமானத்தை அவுஸ்திரேலியா இலங்கைக்கு வழங்குகிறது.

சட்டவிரோத குடியேற்றங்கள் மற்றும் ஆள் கடத்தல் என்பவற்றை தடுப்பது உள்ளிட்ட இலங்கையின் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முதற்கட்டமாக இந்த விமானம் வழங்கப்படுவதாக மிச்சேல் சங் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# தேசிய கணக்காய்வு பிரிவில் ஊழியர்களுக்கு பற்றாக்குறை

கொழும்பு, ஏப். 29

தேசிய கணக்காய்வு பணிமனையில் பெருமளவு ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அந்தப் பணிமனையின் செயல்பாடுகள் பாதிப்படைந்துள்ளன என்றும் கூறப்படுகின்றது.

2 ஆயிரத்து 400 பேர் இருக்க வேண்டிய நிலையில், தற்போது ஆயிரத்து 400 அதிகாரிகள் மாத்திரம் இருக்கின்றனர். இதே வேளை, மொழிபெயர்ப்பாளர்கள் பற்றாக்குறை காரணமாக கணக்காய்வு அறிக்கைகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அதன் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அரசாங்க கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ. பி. சி. விக்ரமரத்னவிடம் கேட்டபோது,

கணக்காய்வாளர்கள் பற்றாக்குறையால் கணக்காய்வு நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், 165 கணக்காய்வு அத்தியட்சகர்கள் மற்றும் 465 கணக்காய்வு உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். கணக்காய்வாளர் வெற்றிடங்களுக்கு சுமார் 600 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# ஒழுக்காற்று விசாரணை தாமதம் அறிக்கை பொலிஸ் மா அதிபரிடம்!

கொழும்பு, ஏப். 29

பொலிஸ் அதிகாரிகளின் ஒழுக்காற்று விசாரணைகளில் ஏற்படும் தாமதம் தொடர்பான தீர்வுகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைத்து, தயாரிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பொலிஸ் மா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஒழுக்காற்று நடைமுறைகளை துரிதப்படுத்தவும், நிர்வாக பிரச்னைகளுக்கான தீர்வுகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் தயாரிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான ஒழுக்காற்று நடைமுறை தொடர்பான விசாரணைகளுக்காக நீண்டகாலமாக எடுத்துக் கொள்ளப்பட்டதால் அதிகாரிகளின் சம்பள அதிகரிப்பு, கொடுப்பனவுகள் மற்றும் பதவி உயர்வுகள் போன்ற நிர்வாக ரீதியான பிரச்னைகள் தொடர்பில் ஆராய்ந்து அதற்கான தீர்வுகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைப்பதற்காக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தலைமையில் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குழுவினர் முன்வைத்த பரிந்துரைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

(ஐ)

# வாகன இறக்குமதி அனுமதி கலந்துரையாடல் ஆரம்பம்!

## நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு




கொழும்பு, ஏப். 29

வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சு, ஜனாதிபதி செயலகம் மற்றும் மத்திய வங்கி உள்ளிட்ட நிறுவனங்களுடன் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருகிறது.

எவ்வாறாயினும், இதுவரை குறித்த விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

இதனிடையே, வாகன இறக்குமதிக்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆராய்வதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# ஏரியில் மூழ்கி இளைஞர் பலி

கொழும்பு, ஏப். 29

அநுராதபுரம் - நொச்சியாகம பிரதேசத்தில் உள்ள மானெல் ஏரியில் மூழ்கி இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

அவர் ஏரியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோதே நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

அதே பிரதேசத்தை சேர்ந்த 21 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

(ஐ)

# விபத்துகளால் ஒருநாளில் மூன்று பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 29

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நேற்று நள்ளிரவு வரையான 24 மணி நேரத்தில் வாகன விபத்துகளில் மூவர் உயிரிழந்தனர்.

புறக்கோட்டை - ஒல்கொட் மாவத்தை இரண்டாம் குறுக்குத் தெருவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

பாதசாரி கடவையில் வீதியை கடந்த பாதசாரிமீது மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தை ஏற்படுத்தியவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கம்பஹா - தொம்பேயில் இடம்பெற்ற விபத்தில் 29 வயது இளைஞர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளும் காரும் மோதி விபத்து ஏற்பட்டது. இதன்போது, மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் வீதியில் வீழ்ந்தபோது எதிரே வந்த லொறி அவர் மீது ஏறியதில் இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதேபோன்று, அநுராதபுரம் - புத்தளம் வீதியில் பண்டுலகம பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 42 வயது நபர் பலியானார். பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது.

## 4கிலோ...

சோதனையிட்டனர். இதன்போது, 4 கிலோ 170 கிராம் தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டன. இந்தத் தங்கம் வவுனியாவுக்கு கடத்தப்பட்டன என்று தெரிய வந்தது. தங்கக் கடத்தலுக்கு பயன்படுத்தப் பட்ட காரும் கைப்பற்றப்பட்டது. அத் துடன், காரின் சாரதி மற்றும் பெண்கள் இருவரும் இதன்போது கைது செய்யப் பட்டனர்.

அவர்களை பொலிஸார் ஊடாக கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நீரை...

சுத்திகரித்து வழங்க வேண்டியுள்ளது. இதில், நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. கிளிநொச்சி தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தின் சுத்திகரிப்பு கொள்ளளவை விட அதிக தண்ணீர் பாவனையும் தேவையும் மக்களிடம் ஏற்பட்டுள்ளது. இதனால் தினமும் தேவையான அளவு நீரை பொது மக்களுக்கு வழங்குவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, பொது மக்கள் இந்த நிலைமையை கருத்தில் கொண்டு தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தவும் - என்று நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது. (ஐ)

## ஈ.பி.எவ்...

கேகாலையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் நாட்டின் நிதி நிலையை ஸ்திரப்படுத்துவதற்காக தேசிய கடன்கள் மறுசீரமைக்கப்பட்டன. இதன்போது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் வட்டி வீதத்தில் தற்காலிக மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

ஊழியர் சேமலாப நிதியத்தை இல்லாதொழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அடிப்படையற்ற வகையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் அனுமதியுடன் ஊழியர் சேமலாப நிதியத்துக்கான வட்டி 9 சதவீதமாக வரையறுக்கப்பட்டது. நாட்டின் நிதி நிலைமை தற்போது ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது, ஆகவே இந்த 9 சதவீத வட்டியை 13 சதவீதமாக அதிகரிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதி முதலீடு செய்யப்பட்டு திரட்டப்பட்ட நிதியின் 13 சதவீதத்தை வட்டியாக செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை உழைக்கும் மக்களுக்கு நற்செய்தியாகும் - என்றார். (எ)

## உரிமை...

- இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளார் காங்கிரஸின் முக்கியஸ்தரும் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்

இலங்கைத் தொழிலாளார் காங்கிரஸ் ஜனாதிபதி வேட்பாளர் பட்டியல் அறிவித்த பின்னர் யார் இந்த நாட்டை முன்னேற்றக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதோ, அவருக்கு வாக்களித்து எங்களது உரிமைகளைத் தக்கவைத்து மலையகம் மேலும் வளர்ச்சியடைய தேவையான திட்டத்தை வைத்து முடிவெடுக்கும் என்றும் செந்தில் தொண்டமான் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் ஆளுநர் இல்லத்தில் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (எ)

## 5வயது...

இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த சிறுமி, சில நாட்களுக்கு முன்னர் காய்ச்சல் காரணமாக அச்சுவேலி பிரதேச மருத்துவமனைக்குச் சென்று வீடு திரும்பியிருந்தார்.

இந்நிலையில், நேற்று அவரின் உடல் நிலை மீண்டும் மோசமடைந்தது. பெற்றோர் சிறுமியை அச்சுவேலி பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோதே அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த சிறுமியின் சடலம் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

பிரேத பரிசோதனைக்குப் பின்னரே உயிரிழப்புக்கான காரணம் தெரியவரும்.

## தமிழ்...

நடத்தவுள்ளது.

கிளிநொச்சி கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தலைமையில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதேநேரம், தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்புக் கூட்டம் பெரியகல்லாறு சித்தி விநாயகர் ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

**சமத்துவ கட்சி**

‘அனைத்து ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் அணிதிரள்வோம் சமத்துவத்தை நிலைநிறுத்திட ஒன்றிணைவோம்’ என்ற தொனிப்பெருளில் சந்திரகுமார் தலைமையிலான சமத்துவ கட்சியின் மே தினக் கூட்டம் கிளிநொச்சி பசுமைப் பூங்கா வளாகத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

**தமிழ் மக்கள் விடுதலை புலிகள்**

இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் மே தினக் கூட்டம் முறக்கொட்டான்சேனையில் நடைபெறவுள்ளது.

இதேநேரம், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மே தினக் கூட்டம் யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் நடைபெறவுள்ளது. நல்லூர் ஆலய முன்றலில் இருந்து பேரணி ஆரம்பமாகி சங்கிலியன் பூங்காவில் நிறைவடையவுள்ளது.

## மகிந்த

பிரேமதாஸ வெற்றியடைவார்.

சஜித் பிரேமதாஸவின் ஆட்சியில் அரசியல் தீர்வு காணப்படும் என்பதுடன் அவர் எப்போதும் மக்கள் பக்கமே நிற்பார். அத்துடன், எந்த அரசியல் தலைவருடன் பகிரங்க விவாதத்துக்குத் சஜித் பிரேமதாஸ தயாராகவே இருக்கின்றார் - என்றார். (ஐ)

## முதுகெலும்பு...

கோரிக்கையை விடுக்குமாறு அவரிடம் மன்றாடிக் கேட்கிறேன்.

இதேபோல் முஸ்லிம் தலைவர்களும் ஒற்றையாட்சி முறைமைக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும். சஜித் பிரேமதாஸவாக இருக்கலாம், அநுரகுமார திஸநாயக்கவாக இருக்கலாம், இவர்கள் கூட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தமாட்டார்கள்.

ஏனெனில், இவர்கள்கூட இலங்கையானது சிங்கள, பௌத்த ஒற்றையாட்சி கொண்ட நாடாகவே இருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். அவர்களிடம் நேர்மை இருந்தால் ஒற்றையாட்சி முறைமையை ஒழித்து சமஷ்டி முறைமை கொண்டுவரப்படும் என அறிவிக்கட்டும். முதுகெலும்பிருந்தால் அவர்கள் இதனை செய்யட்டும் - என்றார். (ஐ)

## மாகாண சபை...

கேள்வி - அரசமைப்பின் 13ஆவது திருத்தம் குறித்து தேசிய மக்கள் சக்தியிடமிருந்து எந்த கருத்தும் பதிலும் இல்லையே உங்களால் அதனை தெளிவு படுத்த முடியுமா?

பதில் - நாங்கள் பல தடவை 13ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைகள் குறித்த எங்கள் நிலைப்பாட்டை தெரிவித்திருக்கின்றோம். 2019ஆம் ஆண்டு வெளியான எங்களின் கொள்கை குறித்த ஆவணத்திலும் இது குறித்து தெரிவித்திருக்கின்றோம். எனினும், நான் மீண்டும் உங்களுக்கு இதனை தெளிவுபடுத்துகின்றேன்.

நாட்டின் இனப்பிரச்னைக்கு மாகாண சபை முறையே முழுமையான தீர்வு என நாங்கள் கருதவில்லை. எனினும், மாகாண சபைகள் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேல் நாட்டில் காணப்பட்டுள்ளன. எங்கள் கட்சியும் மாகாண சபை தேர்தல்களில் போட்டியிடுவது குறித்த ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

வடக்கு, கிழக்கு மக்கள் மாகாண சபைகளை தங்களின் உரிமைகளில் ஒன்று என கருதுகின்றனர். பல வருடங்கள் வேண்டுகோள் விடுத்த பின்னர் தங்களுக்குக் கிடைத்த வெற்றி மாகாண சபைகள் என வடக்கு, கிழக்கு மக்கள் கருதுகின்றனர். மாகாண சபை முறைமையை தொடர வேண்டும் என நாங்கள் கருதுகின்றோம்.

கேள்வி- தமிழ் மக்களின் இனப் பிரச்னையை தேசிய மக்கள் சக்தி எவ்வாறு அணுகும்?

பதில் - மாகாண சபை முறை மாத்திரம் இந்த விவகாரத்துக்கு தீர்வை காண்பதற்கு போதுமானதல்ல என்பதை நான் ஏற்கனவே தெரிவித்துள்ளேன். இலங்கையில் பல வருடங்களாக அரசியல் என்பது ஒரு சமூகத்தை மற்றைய சமூகத்துடன் மோத விடுவதாக காணப்படுகின்றது.

உதாரணமாக 2019 ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றி என்பது முழுமையாக முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான கோஷத்தை அடிப்படையாக கொண்டிருந்தது. எங்கள் நாட்டின் வரலாறு முழுவதும் அரசியல் வெற்றிக்காக சமூகத்தின் ஒரு பகுதியினரை மற்றைய தரப்பிற்கு எதிராக திருப்பிவிடும் செயல்பாடு நடைபெற்றுள்ளது.

அரசியல்கட்சிகள் அவை எந்த சமூகத்தை சேர்ந்தவையாக இந்தாலும் சரி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக சில சந்தர்ப்பங்களில் மக்கள் மத்தியில் பதற்றத்தை தூண்டியுள்ளன. எங்கள் அரசியல் முற்றுமுழுதாக இதிலிருந்து வேறுபட்டது. மிகவும் நெருக்கடியான தருணத்தில் நாங்கள் தேசிய ஐக்கியம், இன ஐக்கியதுக்காகக் குரல் கொடுத்திருக்கின்றோம். ஆகவே இனப் பிரச்னைக்கு தீர்வை காண்பதற்கான முதல் நடவடிக்கையாக சமூகங்களை பிரிப்பதற்கு பதில் அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைக்கும் அரசியல் முறையை உருவாக்கவேண்டும். நாங்கள் அதனை செய்கின்றோம்.

கேள்வி- இதன் மூலம் பிரச்னைகளுக்கு எவ்வாறு தீர்வை காணமுடியும்?

பதில்- தமிழர்களாக உள்ளதால் தமிழ் மக்கள் சில இனத்துவ நெருக்கடிகளை பிரச்னைகளை எதிர்கொண்டுள்ளனர் என்பது எங்களுக்குத் தெரியும்.

அது மொழி, கலாசாரம், மத சுதந்திரம் அரசியல் அதிகாரத்துக்கான போதியளவு சமவாய்ப்பின்மை போன்றவையை அடிப்படையாக கொண்டவையாக காணப்படுகின்றன - இவற்றுக்கு தீர்வை காணவேண்டும்.

அரசமைப்பில் சில ஏற்பாடுகள் உள்ளபோதிலும் அவற்றை பின்பற்றவில்லை நடைமுறைப்படுத்தவில்லை. பிரிவினைவாத யுத்தம் முடிவடைந்து 15வருடங்களாகின்றன. ஆனால், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளிற்கு நேர்மையான தீர்வுகள் எவற்றையும் முன்வைக்கவில்லை.

நாங்கள் இரண்டு விதமான அணுகு முறைகளை நம்புகின்றோம்.

முதலாவது அரசியல் விவகாரம் -பல ஆண்டுகளாக ஆட்சியாளர்களால் தொடர்ந்து மறுக்கப்பட்டு வந்த தமிழ் மக்களின் அதிகாரத்துக்கான நியாயமான உரிமையை நாங்கள் உறுதி செய்வோம். இரண்டாவதாக இலங்கையின் ஏனைய சமூகத்தினரை போல தமிழ் பேசும் மக்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்னைகள் உள்ளன இந்தப் பிரச்னைகளுக்கு தீர்வுகள் காணப்படுவதை நாங்கள் உறுதி செய்வோம்.

இல்லையேல், ஒருவரை ஒருவர் தூண்டிவிடுகின்ற பிரிவினைவாத அரசியல் கலாசாரத்தால் இனப் பிரச்னைக்கு தீர்வை காணமுடியாது. எனவே, இலங்கையின் இனப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வுகளை பெற்றுக்கொடுத்து தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என கட்சி என்ற அடிப்படையில் நாங்கள் நம்புகின்றோம்.

(ஐ)

## கொழும்பில்...

**ஐக்கிய தேசியக் கட்சி**

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் கொழும்பு - மருதானையில் நடைபெறவுள்ளது.

கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் இந்தக்

கூட்டத்தில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்களை அழைத்து வருவதற் கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் கட்சிகளும் அவற்றின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்பர். அத்துடன், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்.

**பொதுஜன பெரமுன**

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டம் பொரளை கம்பல் மைதானத்தில் நடைபெறவுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும்.

விமல், கம்மன்பில, வாசுதேவ, திஸ்ஸ விதாரண போன்ற பங்காளிக் கட்சிகள் தனித்து இயங்குவதாலும், அமைச்சர்கள் பலர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் நிலைமையிலும் பெரமுன கட்சி தனியாகவே மே தினக் கூட்டத்தை நடத்தவுள்ளது.

**ஐக்கிய மக்கள் சக்தி**

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் கொழும்பு புறக்கோட் டையில் இருந்து பேரணியாக சென்று கொழும்பு மாநகர சபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

சஜித் பிரேமதாஸ தலைமையில் நடக்கும் இந்த மே தினக் கூட்டத்தில் அதன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியூதீன், மனோ கணேசன், பேராசிரியர் பீரிஸ் அணியினர் பங்கேற்கவுள்ளனர்.

**ஜே. வி. பி.**

தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் நாட்டின் நான்கு இடங்களில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம், அநுராதபுரம், கொழும்பு, மாத்தறையில் ஜே. வி. பி. மே தினக் கூட்டத்தை நடத்துகிறது.

யாழ்ப்பாணம், அநுராதபுரத்தில் வெப்ப காலநிலையை கருத்தில் கொண்டு பேரணிகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், கொழும்பில் கட்சியின் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தலைமையில் கூட்டம் லிப்டன் சுற்றுவட்டத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு முன்னதாக பி. ஆர். சி மைதானத்தில் பேரணி நடைபெறும்.

**சுதந்திர கட்சி**

சிறீ லங்கா சுதந்திர கட்சியில் மைத்திரி பால சிறிசேன தரப்பின் ஏற்பாட்டில் மே தினக் கூட்டம் கம்பஹா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் விஜயதாஸ ராஜபக்ஷ பங்கேற்பார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# மட்டக்களப்பில் பிரமாண்ட மைதானம்



கோட்டைமுனை, ஏப். 29

மட்டக்களப்பு கோட்டைமுனை பகுதியில் பிரமாண்ட மைதானம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண கிரிக்கெட் வீரர்களின் வளர்ச்சிக்காக இந்த மைதானம் அமைக்கப்பட்டுள்ளது.

பி. வசீகரனால் அவரது சொந்த பணத்தில் ஒரு முழுமையான கிரிக்கெட் மைதானம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

உயர்தர கிரிக்கெட் அனுபவத்தைப் பெற விரும்பும் அனைத்து இளைஞர்களுக்கும் இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது. (எ)

# சந்தேகநபர் தப்பியோட்டம்

கொட்டாஞ்சேனை, ஏப். 29

சட்ட மருத்துவ அதிகாரியிடம் அழைத்துச் செல்லப்பட்ட சந்தேகநபர் மலசல கூடத்துக்குச் செல்ல வேண்டும் என்று கூறி தப்பிச் சென்றுள்ளதாக கொட்டாஞ்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

கிராண்ட்பாஸ் மல்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், குறித்த நபரை மாளிகாகந்தை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த சட்ட வைத்திய அதிகாரியிடம் அழைத்துச் செல்லப்பட்ட போது தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# தேர்தல் காலத்தில் பேசுவதனால் மட்டும் ஒன்றும் செய்ய முடியாது

## சொல்கிறார் வியாழேந்திரன்



துறைநீலாவணை, ஏப். 29

தேர்தல் காலத்தில் வாயால் பேசிவிட்டுப் போவதால் மாத்திரம் ஒன்றும் செய்துவிட முடியாது. பேச்சுக்கப்பால் செயல்பாட்டு ரீதியான விடயங்களையும் முன்னகர்த்திக் கொண்டு செல்ல வேண்டும். எனவே அபிவிருத்தித்திட்டங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும். இல்லையேல் மக்களை வைத்து ஏமாற்றிப் பிழைப்பவர்கள் உள்ளார்கள் என இராஜாங்க அமைச்சர் ச. வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் துறைநீலாவணைக் கிராமத்தில் 350 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 6 கிலோ மீற்றர் வீதிகள் காப்பெற் வீதிகளாக புனரமைக்கப்பட்டு அதனை மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

பேச்சுக்கப்பால் செயல்பாட்டு ரீதியான விடயங்களையும் முன்னகர்த்திக் கொண்டு செல்ல வேண்டும். எனவே அபிவிருத்தித் திட்டங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் இல்லையேல் மக்களை வைத்து ஏமாற்றிப் பிழைப்பவர்கள் உள்ளார்கள்.

மக்களுக்கான தேவைகளைக் கண்டறிந்து சேவைகளை செய்பவர்கள் தான் மக்கள் தலைவர்களாவர். - என்றார். (எ)

# வேலை தேடும் இளைஞர்களிடம் மோசடி சம்பவங்கள் அதிகரிப்பு

## ஜனாதிபதி ஊடகப் பிரிவு

கொழும்பு, ஏப். 29

ஜனாதிபதி அலுவலகத்தில் பதவி வகிப்பதாகக் கூறி போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து, முதலீட்டாளர்கள், வேலை தேடும் இளைஞர்கள், பல்வேறு நாடுகளுக்கு வீசா பெற முயற்சிப்பவர்கள் எனப் பலரை ஏமாற்றி, பணம் பெறும் மோசடி சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறான மோசடியாளர்கள் குறித்து பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

இவ்வாறான நபர்கள் குறித்து சந்தேகம் ஏற்பட்டால் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பிரசாத் செனரத்வை 071 - 530 8032 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்புகொண்டு, தகவல் வழங்குமாறும் ஜனாதிபதி அலுவலகம் பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. (எ)

# அரிசி வழங்கும் திட்டத்தில் பல்வேறு முறைகேடுகள்

கொழும்பு, ஏப். 29

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் திட்டத்தில் பல்வேறு முறைகேடுகள் மற்றும் ஊழல்கள் நடந்துள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

2. 74 மில்லியன் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் ஜனாதிபதியின் வேலைத் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் அரிசி விநியோகிக்கப்படுகிறது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளி குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி விநியோகம் பிரதேச செயலக மட்டத்தில் இடம்பெறுகின்றது.

இந்த அரிசி மக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்ற போதிலும், தங்காலை, நெடோல்பிட்டிய, வெலிபென்ன, லலிதபுர ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பணம் கொடுத்து அரிசியை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதன்படி 20 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை பல்வேறு தொகைகளில் பணம் செலுத்த வேண்டியுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளரிடம் வினவியபோது, மக்களுக்கு விநியோகிக்கப்படவிருந்த அரிசி தொகையை பாதுகாப்பதற்காக இருந்த காவலாளிக்கு பணம் கொடுப்பதற்காக மக்களிடம் பணம் வசூலித்து வழங்கப்பட்டமை குறித்து தகவல் கிடைத்ததாக தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இது தொடர்பான உண்மைகளை ஆராய்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.

இதேவேளை, கந்தளாய் பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு வழங்குவதற்காக உத்தியோகபூர்வ நிழற்குடை கட்டடத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த அரிசி தொகையில் 20 மூடைகள் அரிசி திருடிச் செல்லப்பட்டதாக முறை செய்யப்பட்டுள்ளது.



நேற்று முன்தினம் காலை குறித்த கட்டடத்தின் ஜன்னல் திறந்து கிடப்பதைப் பார்த்த பிரதேசவாசி ஒருவர் கிராம உத்தியோகத்தரிடமும் பிரதேச செயலாளரிடமும் தெரிவித்துள்ளார்.

கந்தளாய் பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

அறையின் பிரதான கதவை உடைத்து உள்ளே நுழைந்து யாரும் அரிசியை திருடிச் சென்றிருக்கவில்லை என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

இதனிடையே ஹப்புத்தளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட குறைந்த வருமானம் பெறுவோருக்கு வழங்கப்பட்ட அரிசி பாவனைக்கு தகுதியற்றது என அப்பகுதி மக்கள் குற்றஞ்சுமத்தினர்.

இந்த அரிசி அம்பாறை பிரதேசத்திலுள்ள அரிசி ஆலையொன்றால் வழங்கப்பட்டதாகவும், காலாவதியாகும் திகதிக்கு மேல் மேலும் ஒரு திகதி குறிப்பிட்டு லேபிள் ஒட்டப்பட்டுள்ளதாகவும் மக்கள் குற்றம்சாட்டினர். (எ)

# திறமையற்ற அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதற்கு ஆராய்வு

கொழும்பு, ஏப். 29

சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பாகச் செயல்படும் தலைமை அதிகாரிகளில் திறமையற்றவர்களுக்கு எதிராக உடனடியாக கடும் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சிறைச்சாலை திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது.

சிறைச்சாலைகளின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக சிறைச்சாலைகளின் முக்கிய அதிகாரிகளுடனான சந்திப்பின்போது இது தொடர்பில் ஆராயப்பட்டதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனைத்து சிறைச்சாலைகளின் சிரேஷ்ட அத்தியட்சகர்கள், அத்தியட்சகர்கள், உதவி அத்தியட்சகர்கள் மற்றும் தலைமை காவலர்கள் ஆகியோர் சூம் தொழில்நுட்பத்தின் மூலம் நடைபெற்ற கலந்துரையாடலில் இணைந்திருந்தனர்.

சிறைச்சாலைகள் தொடர்பில் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்களங்களுக்கு கிடைத்த தகவல்கள் தொடர்பில் தனித்தனியாக கலந்துரையாடப்பட்டதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

திறமையற்ற அதிகாரிகளுக்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் கடும் எச்சரிக்கை விடுத்ததாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் கூறின.

அவர்கள் பணிபுரியும் சிறைச்சாலைகளில் மீண்டும் சட்டவிரோத செயல்பாடுகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டால் உடனடியாக அந்தச் சிறைகளிலிருந்து மாற்றப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

பணி நீக்கப்பட்ட

# பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் போதைப்பொருளுடன் கைது!

கொழும்பு, ஏப். 29

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுடன் தொடர்பைப் பேணி போதைப்பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் பணி நீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக மேல் மாகாண வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

சந்தேகநபர், திவுலப்பிட்டி உலுகடே சந்தியில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது அவரால் காண்பிக்கப்பட்ட அடையாள அட்டையில் ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் சோதனை மேற்கொண்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில், அவர் 2022 ஆம் ஆண்டு புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய போது பணி நீக்கம் செய்யப்பட்டவர் எனத் தெரியவந்ததாக பொலிஸார் கூறினர்.

இவர் கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய காரொன்றின் பாகங்களை மாற்றுவதற்கும் மறைப்பதற்கும் உதவியவர் எனவும் விசாரணைகளில் தெரியவந்ததாக உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# லக்னோவை வீழ்த்தி ஆர். ஆர். இலகு வெற்றி



லக்னோ, ஏப். 29

லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிக்கு எதிரான ஐ. பி. எல். ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐ. பி. எல். ரி - 20 கிரிக்கெட் தொடரில் லக்னோவிலுள்ள ஏகானா மைதானத்தில் நடந்த 44 ஆவது ஆட்டத்தில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின.

இதில் நாணயச்சுழற்சியில் வென்ற ஆர். ஆர். அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. இந்நிலையில் லக்னோ அணி சார்பில் குயிண்டன் டி கொக், அணித் தலைவர் கே. எல். ராகுல் இணை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களம் கண்டது. குயிண்டன் டி கொக் 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஸ்ரொய்னிஸ் ஓட்டம் எதுவும் பெறாத நிலையில் விக்கெட்டை பறிகொடுத்து வெளியேற லக்னோவின் தொடக்கம் சற்று தடுமாற்றமாக அமைந்தது.

தீபக் ஹூடா மற்றும் கே. எல். ராகுல் இணைந்து சரிவிலிருந்து மீட்டதுடன் அணியின் ஓட்ட எண்ணிக்கையையும் உயர்த்தினர். இருவரும் அடுத்தடுத்து அரைச்சதம் கடந்தனர். 50 ஓட்டங்கள் எடுத்திருந்த தீபக் ஹூடாவை அஸ்வின் ஆட்டமிழக்கச் செய்தார். சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட கே. எல். ராகுல் 76 ஓட்டங்கள் எடுத்தபோது விக்கெட்டை இழந்தார். இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 196 ஓட்டங்கள் எடுத்தது லக்னோ.

197 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் அணியில், தொடக்க ஆட்டக்காரர்களாக ஜாஸ் பட்லர் மற்றும் யஷஸ்வி ஜெய்ஸ்வால் துடுப்பெடுத்தாடினர். இருவருமே தலா 18 பந்துகளில் முறையே 34 மற்றும் 24 ஓட்டங்கள் எடுத்து நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெளியேறினர்.

அடுத்து வந்த ஆர். ஆர். அணித் தலைவர் சஞ்சு சாம்சன் 33 பந்துகளுக்கு 71 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். ரியான் பராக் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். துருவ் ஜூரேல் 52 ஓட்டங்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்நிலையில் கொடுக்கப்பட்ட இலக்கை 19 ஓவர்களில் தாண்டி ஏழு விக்கெட்கள் வித்தியாசத்தில் லக்னோ அணியை வீழ்த்தி ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வெற்றி பெற்றது. (எ)

# டில்லியிடம் போராடி தோற்றது மும்பை

டில்லி, ஏப். 29

ஐ. பி. எல். ரி - 20 கிரிக்கெட் தொடரில் 5 முறை சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணி 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியிடம் போராடி தோல்விடைந்தது.

டில்லியிலுள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நடந்த இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 257 ஓட்டங்கள் குவித்தது. ஐ. பி. எல். வரலாற்றில் அந்த அணியின் அதிகபட்ச ஓட்டக்குவிப்பாக இது அமைந்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான ஜேக் ஃப்ரேசர் மெக்கர்க் 27 பந்துகளில், 6 சிக்ஸர்கள், 11 பௌண்ட்ரிகளுடன் 84 ஓட்டங்கள் விளாசினார். அவருக்கு உறுதுணையாக விளையாடிய அபிஷேக் போரல் 27 பந்துகளில், ஒரு சிக்ஸர், 3 பௌண்ட்ரிகளுடன் 36 ஓட்டங்கள் சேர்த்தார்.

ஜேக் ஃப்ரேசர் மெக்கர்க் 15 பந்துகளில் அரைச் சதத்தை விளாச பவர்பிளேவில் டில்லி அணி 92 ஓட்டங்கள் குவித்தது. இந்தத் தொடரில் ஜேக் ஃபரேசர் மெக்கர்க் 15 பந்துகளில் அரைச் சதம் அடிப்பது இது இரண்டாவது முறையாகும்.

முதல் விக்கெட்டுக்கு ஜேக் ஃப்ரேசர் மெக்கர்க், அபிஷேக் போரல் ஜோடி 7. 4 ஓவர்களில் 114 ஓட்டங்களைக் குவித்தது. இதன் பின்னர் களமிறங்கிய ஷாய் ஹோப் 17 பந்துகளில், 5 சிக்ஸர்களுடன் 41 ஓட்டங்களும், அணித் தலைவர் ரிஷப் பண்ட் 19 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 29 ஓட்டங்களும் விளாசி வெளியேறினர்.

இறுதிக்கட்ட ஓவர்களில் மட்டையை சுழற்றிய டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 25 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகளுடன் 48 ஓட்டங்களும், அக்சர் படேல் 11 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். மும்பை அணியின் பந்து வீச்சில் ஜஸ்பிரீத் பும்ரா, பியூஷ் சாவ்லா ஆகியோர் மட்டுமே குறைந்த ஓட்டங்களை விட்டுக் கொடுத்தனர். இவர்கள் தலா 4 ஓவர்களை வீசி முறையே 35 மற்றும் 36 ஓட்டங்களை வழங்கினர். அதிகபட்சமாக லூக் வுட் 68 ஓட்டங்களையும், நுவான் துஷாரா 56 ஓட்டங்களையும் தாரை வார்த்தனர். அணித் தலைவர் ஹர்திக் பாண்டியா வீசிய 2 ஓவர்களில் 41 ஓட்டங்கள் குவிக்கப்பட்டன.

258 ஓட்டங்கள் என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணியின் முன்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றமளித்தனர்.

ரோஹித் சர்மா 8, இஷான் கிஷன் 20, சூர்யகுமார் யாதவ் 26 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். 6 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 65 ஓட்டங்கள் என்ற நிலையில் திலக் வர்மா, ஹர்திக் பாண்டியா ஜோடி தாக்குதல் ஆட்டம் மேற்கொண்டது.

இதனால் அணியின் ஓட்ட விகிதம் சீராக உயர்ந்தது. ஹர்திக் பாண்டியா 24 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 46 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரஷிக் சலாம் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய நேஹல் வதேரா 4 ஓட்டங்களில் நடையைக் கட்டினார். இதன் பின்னர் களமிறங்கிய டிம் டேவிட், திலக் வர்மாவுடன் இணைந்து அதிரடியாக துடுப்பெடுத்தாடினார்.



மும்பை அணியின் வெற்றிக்கு கடைசி 3 ஓவர்களில் 64 ஓட்டங்கள் தேவையாக இருந்தன. முகேஷ் குமார் வீசிய 18 ஆவது ஓவரில் முதல் 3 பந்துகளில் 2 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரி விளாசிய டிம் டேவிட் 4 ஆவது பந்தில் ஆட்டமிழந்தார். டிம் டேவிட் 17 பந்துகளில், 37 ஓட்டங்கள் சேர்த்தார். தொடர்ந்து அந்த ஓவரின் கடைசி பந்தில் திலக் வர்மா சிக்ஸர் விளாச ஆட்டத்தில் பரபரப்பு அதிகமானது.

2 ஓவர்களில் 41 ரன்கள் தேவை என்ற நிலையில் ரஷிக் சலாம் வீசிய அந்த ஓவரில் 2-வது பந்தில் சிக்ஸர் விளாசிய முகமது நபி அடுத்த பந்தில் ஆட்டமிழந்தார். இதையடுத்து களமிறங்கிய பியூஷ் சாவ்லா சந்தித்த முதல் பந்தை சிக்ஸருக்கு விளாசினார். கடைசி பந்தில் திலக் வர்மா போராடி 3 ஓட்டங்கள் சேர்க்க ஒரு வழியாக இந்த ஓவரில் 16 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டன.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 25 ஓட்டங்கள் தேவையாக இருந்து. முகேஷ் குமார் வீசிய இந்த ஓவரின் முதல் பந்தில் 2 ஓட்டங்கள் சேர்க்கும் முயற்சியில் திலக் வர்மா ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தார்.

32 பந்துகளை சந்தித்த திலக் வர்மா 4 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 63 ஓட்டங்கள் எடுத்தார். இதன் பின்னர் மும்பை அணியின் நம்பிக்கை தளர்ந்தது. அடுத்த 3 பந்துகளில் 13 ஓட்டங்கள் சேர்க்கப்பட கடைசி பந்தில் பியூஷ் சாவ்லா 10 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார். லூக் வுட் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். முடிவில் 20 ஓவர்களில் மும்பை அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 247 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது. டில்லி அணி சார்பில் ரஷிக் சலாம், முகேஷ் குமார் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், கலீல் அகமது 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ஜேக் ஃப்ரேசர் மெக்கர்க் தெரிவு செய்யப்பட்டார். 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற டில்லி அணிக்கு இது 5 ஆவது வெற்றியாக அமைந்தது. 10 ஆட்டங்களில் விளையாடியுள்ள அந்த அணி 10 புள்ளிகளுடன் பட்டியலில் 5 ஆவது இடத்துக்கு முன்னேறியது. மும்பை இந்தியன்ஸ் அணிக்கு இது 6 ஆவது தோல்வியாக அமைந்தது. 9 ஆட்டங்களில் விளையாடியுள்ள மும்பை இந்தியன்ஸ் 3 வெற்றி, 6 தோல்விகளுடன் 6 புள்ளிகள் பெற்று 9 ஆவது இடத்திலுள்ளது. (எ)



# பஞ்சாப் வரலாற்று வெற்றி கே. கே. ஆர். பெரும் சோகம்

கொல்கத்தா, ஏப். 29

கே. கே. ஆர். அணிக்கு எதிராக பஞ்சாப் கிங்ஸ் அணி அதிரடியாக துடுப்பெடுத்தாடி அபார வெற்றிபெற்றது.

262 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை துரத்திய பஞ்சாப் அணிக்கு பிரப்சிம்ரன் சிங் மற்றும் ஜானி பேர்ஸ்டோவ் அதிரடியான ஆரம்பம் கொடுத்தனர். இருவரும் கொல்கத்தா பந்துவீச்சை எல்லைக் கோட்டைத் தாண்டி பறக்கவிட்டு ஈடன் கார்டன் மைதான இரசிகர்களை குஷிப்படுத்தினர்.

பிரப்சிம்ரன் சிங் 18 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். தொடர்ந்து ஆடுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 54 ஓட்டங்கள் எடுத்த நிலையில் எதிர்பாராதவிதமாக ஓட்டம் எடுக்க முற்பட்டு தனது விக்கெட்டை பறிகொடுத்தார்.

எனினும், ஜானி பேர்ஸ்டோவ் தனது அதிரடி பாணியை கைவிடவில்லை. மறுபக்கம் ரில்லி ரூசோவ் 26 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அடுத்துவந்த ஷஷாங்க் சிங் - பேர்ஸ்டோவ் இருவரும் இணைந்து கொல்கத்தா பந்துவீச்சை ஒரு கை பார்த்தனர்.

இதனால் பஞ்சாப் அணியின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென உயர்ந்தது. ஜானி பேர்ஸ்டோவ் சதம் விளாசினார். மறுபக்கம் தொடர் சிக்ஸர்களை பறக்கவிட்டு ஷஷாங்க் சிங் அரைச்சதம் பதிவு செய்தார்.

இறுதிக்கட்டத்தில் இருவரும் தீயாக விளையாட பஞ்சாப் அணி 18. 4 ஓவர்களில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எட்டி வெற்றியைப்பெற்றது. இரண்டு விக்கெட்களை மட்டுமே இழந்த பஞ்சாப் 262 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை வெற்றிகரமாக துரத்தி வெற்றி பெற்றது.

ஜானி பேர்ஸ்டோவ் 108 ஓட்டங்கள், ஷஷாங்க் சிங் 68 ஓட்டங்கள் குவித்தனர். இதில் குறிப்பாக ஜானி பேர்ஸ்டோவ் 9 சிக்ஸர்களும், ஷஷாங்க் சிங் 8 சிக்ஸர்களும் விளாசினர்.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி பந்துவீச்சை தெரிவு செய்ததது. இதன்படி கொல்கத்தா அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக சுனில் நரைன் - பிலிப் சால்ட் களமிறங்கினர்.

இருவரும் இணைந்து விளாசித்தள்ளியதில் 10 ஓவர் முடிவில் விக்கெட் இழப்பின்றி 137 ஓட்டங்களைச் சேர்த்தது கொல்கத்தா. அரைச்சதம் கடந்து களத்தில் நின்றிருந்தவர்களை ஆட்டமிழக்க செய்ய முடியாமல் பஞ்சாப் பந்துவீச்சாளர்கள் தடுமாறினர்.

இந்நிலையில் 4 சிக்ஸர்கள் விளாசி 71 ஓட்டங்களைச் சேர்த்திருந்த சுனில் நரைனை 11 ஆவது ஓவரில் ராகுல் சஹர் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து 13 ஆவது ஓவரில் பிலிப் சால்ட் 75 ஓட்டங்கள் பெற்றிருந்தபோது விக்கெட்டை பறிகொடுத்தார். 6 சிக்ஸர்கள் விளாசி அதிரடி காட்டிய சால்ட் ஆட்டமிழந்த பின்னர் கே. கே. ஆர். ஓட்ட எண்ணிக்கை வீதம் சரிய ஆரம்பித்தது.

இருப்பினும் இந்தப் போட்டியில் அண்ட்ரூ ரஸல் 2 சிக்ஸர்களை விளாசியதன் மூலம் கே. கே. ஆர். அணி சார்பில் அதிக சிக்ஸர்கள் அடித்தவர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார். ஐ. பி. எல்லில் இதுவரை அவர் 201 சிக்ஸர்களை விளாசியுள்ளார். ஆனால் 24 ஓட்டங்களில் ரஸல் விக்கெட்டை இழந்தார்.

3 சிக்ஸர்கள் அடித்து 10 பந்துகளில் 28 ஓட்டங்களைச் சேர்த்து அதிரடி காட்டிய ஸ்ரேயஸ் ஐயரை அர்ஷ்தீப் சிங் வெளியேற்றினார். தொடர்ந்து வந்த ரிங்கு சிங் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேற, இறுதிப் பந்தில் 38 ஓட்டங்கள் எடுத்திருந்த வெங்கடேஷ் ஐயர் ஓட்டம் எடுக்க முற்பட்டு விக்கெட்டை இழந்தார். இதனால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்த கொல்கத்தா 261 ஓட்டங்கள் குவித்தது.

இந்நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி இரண்டு விக்கெட்டுகளை மட்டும் இழந்து 262 ஓட்டங்களைப் பெற்று ஐ. பி. எல்லில் அதிககூடிய ஓட்டங்களைத் துரத்தி வெற்றிபெற்ற அணி என்ற வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்தது. (எ)

# அமெரிக்கா: தொடரும் இந்திய மாணவர்களின் மர்ம மரணங்கள் - என்ன நடக்கிறது?

சவிதா படேல்

மிகுந்த மனச்சோர்வுடன் இருக்கிறேன் என்கிறார் அமெரிக்க மாகாணமான மிசோரியின், செயின்ட் லூயிஸில் உள்ள வாஷிங்டன் பல்கலைக் கழகத்தின் மாணவர் ஜெய் சுஷில்.

இந்தியாவை சேர்ந்த 34 வயது கிளாசிக்கல் நடனக் கலைஞரும், சுஷிலின் சக மாணவருமான அமர்நாத் கோஷ் கடந்த பிப்ரவரியில் கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்தில் இருந்து சுஷிலால் மீண்டுவர முடியவில்லை. உள்ளூர் காவல்துறையினர் இதைக் கொலை வழக்காக விசாரித்து வருகின்றனர்.

தனது பல்கலைக்கழகத்தில் இருந்து இதுகுறித்த தகவலை அறிவதற்கு முன்பு, இந்தியாவில் உள்ள ஒரு நண்பர் மூலம் கோஷ் மரணம் பற்றி அறிந்து கொண்டதாகக் கூறுகிறார் சுஷில்.






"இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் எங்களிடம் இதுகுறித்து சொன்னார்கள். நிர்வாகத்தின் பதிலில் மாணவர்களுக்கு திருப்தியில்லை. இந்தியர்களின் உணர்வுகளைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை என்ற ரீதியில்தான் அவர்களின் பதில் இருந்தது," என்கிறார் சுஷில்.

பல்கலைக்கழக வளாகத்திற்கு வெளியே உள்ள ஒரு தெருவில் கோஷ் சுட்டுக் கொல்லப்பட்டார். சட்ட அமலாக்கப் பிரிவினர் இறந்த மாணவரின் அடையாளத்தை உறுதிப்படுத்திய பின்னரே அவரது மரணம் குறித்து அதிகாரப்பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது என்று பல்கலைக் கழகம் தெளிவுபடுத்தியது.

அவ்வாறு அடையாளத்தை உறுதி செய்ய குறிப்பிட்ட நேரம் தேவைப்படும், இறந்த மாணவரின் உறவினர் ஒருவரது ஒப்புதல் பெற்று இது நடைபெறும்.

**11 இந்திய மாணவர்கள் மரணம்**

இதுவொரு 'பயங்கரமான துயரம்' என்று கூறிய வாஷிங்டன் பல்கலைக்கழகத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பியல் துறை துணைவேந்தர் ஜூலி ஃப்ளோரி, "அமர்நாத்திற்கு நெருக்கமானவர்களின் விருப்பப்படி இந்த சோகமான செய்தியை எங்களால் முடிந்தவரை வேகமாக பல்கலைக்கழக மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டோம்," என்றார்.

"இறந்த ஒருவரின் அடையாளத்தை உறுதிசெய்ய 48 மணிநேரம் ஆகும். பல சந்தர்ப்பங்களில், அதற்கு இன்னும் அதிக நேரம்கூட தேவைப்படும்" என்று செயின்ட் லூயிஸ் காவல்துறை கூறியது.

இந்த ஆண்டு இதுவரை அமெரிக்காவில் இறந்த 11 இந்திய மாணவர்கள் அல்லது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மாணவர்களில் அமர்நாத் கோஷும் ஒருவர். இது அங்கு வாழும் இந்திய சமூகத்திற்குள் பாதுகாப்பு குறித்த அச்சத்தைத் தூண்டியுள்ளது.

அதிக குளிர், தற்கொலை, துப்பாக்கியால் சுடப்பட்டுக் கொலை என இறப்புக்கான காரணங்கள் வெவ்வேறாக உள்ளன. இந்தச் சம்பவங்களுக்கு இடையே தெளிவான தொடர்பு இல்லை என்று நிபுணர்கள் கூறுகின்றனர். ஒவ்வொரு சோக நிகழ்வும் வளாகங்களில் எதிரொலிக்கும் போது, ஒருபக்கம் படிப்பையும் கவனித்துக்கொண்டு மறுபுறம் இந்த அச்சுறுத்தல்களையும் சமாளித்து, மாணவர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

"இருட்டிய பிறகு வெளியே செல்வதைத் தவிர்க்கிறோம். நகரத்தில் இரவு வேளையில் பாதுகாப்பற்றதாக இருக்கும் பகுதிகளைக் கண்டறிந்துள்ளோம். வேறு என்ன செய்வது?" எனக் கேட்கிறார் சுஷில்.

அவரைப் போலவே, மற்றவர்களும் தங்கள் பல்கலைக்கழகங்கள் சரியான நேரத்தில் இந்த இறப்புகள் குறித்து அறிவிக்கவில்லை என்று கூறுகின்றனர். இந்திய ஊடகங்கள் மூலமாகவோ அல்லது வீட்டில் உள்ள உறவினர்கள் மூலமாகவோ இறந்தவர்களைப் பற்றி அவர்கள் அறிந்து கொள்கிறார்கள்.

க்ளீவ்லேண்ட் ஸ்டேட் யுனிவர்சிட்டியின் (சிஎஸ்இ) 25 வயது மாணவர் முகம்மது அப்துல் அர்பாத். மார்ச் மாதம் காணாமல் போன இவர், இந்த மாதத் தொடக்கத்தில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

அர்பாத் சேர்ந்த அதே நேரத்தில் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த பெயர் சொல்ல விரும்பாத ஒரு மாணவர், "அர் பாத் இறந்ததைத் தனது பெற்றோரிடம் இருந்து வந்த வாட்ஸ்அப் செய்தி மூலம் அறிந்து கொண்டேன்," என்று கூறினார்.

"இதைப் பற்றிக் கூறி, என்னைப் பாதுகாப்பாக இருக்குமாறு என் பெற்றோர் அறிவுறுத்தினர்" என்று அவர் கூறினார்.

**இந்தியர்கள் என்பதால் கொல்லப்பட்டார்களா?**

கடந்த 2022-23ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 267,000 இந்தியர்கள் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் சேர்ந்துள்ளனர். 2030ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை பத்து லட்சத்தை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

"அமெரிக்காவில் படித்து பட்டம் பெறுவது குறித்த ஆசை என்பது இந்தியாவில் அதிகமாக உள்ளது. அதுதான் பல இந்தியக் குடும்பங்களை அமெரிக்கா பக்கம் திருப்புகிறது," என்கிறார் நியூயார்க்கை சேர்ந்த கல்வி நிபுணர் ராஜிகா பண்டாரி.

நியூ ஜெர்சியில் உள்ள ட்ரூ பல்கலைக் கழகத்தின் இணைப் பேராசிரியரான சங்கே மிஸ்ரா பேசுகையில், "இந்த இறப்புகளை இணைக்க ஒரு தெளிவான முறை என்று எதுவும் இல்லை. அவர்கள் இந்தியர்கள் என்பதால் மட்டுமே இது நடக்கிறது என்ற ஒரு மேலோட்டமான கதையில் சிக்காமல் கவனமாக இதை அணுகுவது முக்கியம். இவை இன விரோதம் அல்லது இனம் சார்ந்த தாக்குதல்கள் என்பதற்கான எந்த ஆதாரங்களையும் நான் பார்க்கவில்லை," என்று கூறுகிறார்.

அமெரிக்காவில் படிக்கும் தங்கள் பிள்ளைகளுடன் தொடர்ந்து இணைப்பில் இருக்க முயல்வதாகக் கூறுகிறார்கள் இந்தியப் பெற்றோர்கள்.

"இந்தியாவில் இருந்துகொண்டு இது போன்ற செய்திகளைக் கேட்கும் போதெல்லாம் அது எங்களை மிகவும் பயமுறுத்துகிறது" என்கிறார் மீனு அவல். இவரது மகன் தெற்கு கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் படித்து வருகிறார்.

"யாரேனும் கொள்ளையடிக்க முயன்றால்கூட பதில் தாக்குதலில் ஈடுபடாமல், அவர்கள் கேட்கும் பணத்தைக் கொடுத்துவிடு என்று எனது மகனுக்கு அறிவுறுத்தினேன்," என்று கூறுகிறார் மீனு அவல்.

ஜெய்ப்பூர் நகரைச் சேர்ந்த நீது மர்தா, நியூயார்க் பல்கலைக்கழகத்தில் படிக்கும் தனது மகளுடன் தினமும் பேசுவதாகவும், மகளது நண்பர்களின் தொலைபேசி எண்களை போனில் வைத்திருப்பதாகவும் கூறுகிறார்.

"தெரியாத நபர்களுடன் தனியாக வெளியே செல்ல வேண்டாம் என்று நான் அவளிடம் கூறியுள்ளேன்" என்கிறார் நீது. வெவ்வேறு வளாகங்களில் உள்ள மாணவர்களும் தங்கள் சொந்த பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றுகிறார்கள்.

மாசசூசெட்ஸில் உள்ள டஃப்ட்ஸ் பல்கலைக்கழகத்தின் தெற்காசிய சங்கத்தின் இணைத் தலைவர்களான அனுஷ்கா மதன் மற்றும் இஷிகா குப்தா ஆகியோர், "சில பொதுவான பாதுகாப்பு விதிகள் உள்ளன, அதில் இரவில் வளாகத்தில் தனியாக நடக்கக்கூடாது என்ற விதியும் ஒன்று" என்று கூறுகிறார்கள்.

"பாஸ்டன் நகரம் மிகவும் பாதுகாப்பானதுதான். ஆனால் நாங்கள் இப்போது கூடுதல் எச்சரிக்கையுடன் செயல்படுகிறோம். எங்கள் சுற்றுப் புறங்களைப் பற்றி அதிகம் தெரிந்து வைத்துக்கொள்ள முயற்சி செய்கிறோம்," என்றார் இஷிகா குப்தா.

**உளவியல் தாக்கங்கள்**

பாதுகாப்பு பிரச்னைகள் மட்டுமல்லாது, உளவியல் ரீதியாக மாணவர்களிடம் ஏற்படும் தாக்கத்தையும் பல்கலைக் கழகங்கள் அறிந்திருக்கின்றன.

"சர்வதேச மாணவர்கள் தொடர்ந்து மனநலப் பிரச்னைகளை எதிர்கொள்கின்றனர் என்பது தெளிவாகிறது. அவர்களின் விசா நிலை பாதிக்கப்படாமல் இருக்க, ஏற்கெனவே இருக்கும் பொருளாதார அழுத்தம் மற்றும் கல்வி அழுத்தத்துடன் இதுவும் ஒரு கவலையாக அவர்களுக்கு மாறியுள்ளது," என்கிறார் கல்வி நிபுணர் பண்டாரி.

"வீட்டிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவில் இருக்கும்போது, இதுவே ஒரு பெரிய உளவியல் சுமை" என்கிறார் அவர்.



(15ம் பக்கம் பார்க்க)

# “விடிய விடிய இராமன் கதை, விடிந்த பின், இராமன் சீதைக்கு என்ன முறை?”

- ச. வி. கிருபாகரன்,
(தமிழர் மனித உரிமை மையம்,
பிரான்ஸ்)

“விடிய விடிய இராமன் கதை, விடிந்த பின் இராமன் சீதைக்கு என்ன முறை?” இது ஒரு பழமொழி அல்லது விடுகதை என்பது யாவரும் அறிந்த விடயம். இதை இங்கு எழுதுவதற்கு முக்கிய காரணம், எமது அருமை நண்பர், திறமையான தமிழ் ஆங்கில ஊடகவியலாளரான, காலம் சென்ற சிவராம் எனப்படும் தரகியினால், சிங்கள பௌத்தர்களுக்கு, அவர் படுகொலை செய்யப்படு முன்னர் எழுதப்பட்ட கட்டுரையில் உள்ளடக்கப்பட்ட விடயம்.

இதை குறிப்பிடுவதற்கு பல காரணங்கள் உள்ளன, ஆனால் யாவற்றையும் இங்கு எழுதுவது என்பது முடியாத விடயம்.

தமிழர்களின் முப்பது வருடங்களான ஆயுத போராட்டம், அதாவது தமிழீழ விடுதலை புலிகளினால் - த.ஈ.வி.பு ஓர் நடைமுறை அரசை இரு தசாப்தங்களிற்கு மேலாக நடத்தினர்கள் என்பது சரித்திரம்.

இவ் நடைமுறை அரசு, 2009ம் ஆண்டு மே மாதம் முடிவிற்கு வந்துள்ளது. இதனை தொடர்ந்து எனது கட்டுரைகள் செவ்விகளில், கடந்த பதினாறு வருடங்காளாக முன்னிலைப்படுத்தி கூறிவரும் விடயம் - த.ஈ.வி.பு தலைவர் பிரபாகரன், தனது 2008ம் ஆண்டு மாவீரர் தின உரையில் கூறியது போல், இந்தியாவுடனான உறவு பற்றியது.

**அவர் அறுத்து உறுத்தி கூறியது....**

இதை த.ஈ.வி.புகளின் தலைவர் வடக்கு கிழக்கு வாழ் மக்களிற்கும், புலம் பெயர் வாழ் மக்களிற்கும் அறுத்து உறுத்தி கூறியதற்கு, நிட்சயம் பல காரணிகள் இல்லாமல் இல்லை. அவற்றை இக் கட்டுரையில் ஆராய வேண்டிய அவசியம் இல்லை.

ஈழத்தமிழர்கள் பலர், சர்வதேச நிலைகளை அறியாதும் தெரியாதும், சிலர் தெரிந்தும் தெரியாது மக்களின் வாக்கு வங்கியை நோக்கி, யாதர்த்திற்கு எதிர்மாறான கருத்துக்களை கூறுகிறர்கள் என்பதை இங்கு எழுதித்தான் மக்கள் அறிய வேண்டிய அவசியமில்லை.

உலகில் மிக அண்மை காலங்களில், தமது வெளிவாரியான சுயநிர்ணய போராட்டத்தில் வெற்றி கண்ட - ஏரித்தீரியா, கிழக்கு தீமூர், தென் சூடான், கோசாவா போன்றவை, தமது உடனடி அயல் நாடுகளின் நட்பு உதவியுடனே வெற்றி பெற்றார்கள். இவ்விடயத்தில் சரித்திரம் தெரியாதவர்கள் அறியாதவர்கள், தாம் அரசியல் கதைப்பதற்கு முன், இவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.

சுருக்கமாக கூறுவதனால், தமிழீழ மக்களிற்குவென சர்வதேசம் விசேட ஒழுங்குகளை செய்யுமென நாம் எதிர்பார்ப்பது மிகவும் மிலேச்சதனம். இவ் நிலையில் - நமது அயல்நாடும் பிராந்திய வல்லராசான இந்தியாவின் துணை இல்லாது, ஈழத்தமிழர்களாகிய நாம் எந்த அரசியல் தீர்வையும் பெறுவது என்பது எதிர்காலத்தில் பகற்கனவு.

இன்றைய நிலையில் - ஈழத்தமிழர்களிடையே ஒற்றுமையோ ஆயுத பலமோ இல்லாத நிலையில், சிறிலங்கா அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடாத்தி, சிறிலங்கா பாராளுமன்றத்தின் மூலம், வடக்கு கிழக்கை தாயாகமாக கொண்ட தமிழர்களுக்கு, ஒரு அரசியல் தீர்வு கிடைக்குமெனில், நாம் கடந்த பதினாறு ஆண்டுகள் இதற்காக காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

**தெற்கின் அரசியல் தலைவர்கள்**

ஒத்துமொத்தமாக தெற்கின் அரசியல் தலைவர்களின் மனரீதியான சிந்தனை என்னவெனில் - பெருந்தொகையான பணத்தை செலவு செய்ததுடன், ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களின் உயிரை பணயம் வைத்து தாம் வென்ற யுத்தத்தின் பின்னரும், நாம் தமிழருக்கு எதற்காக அரசியல் தீர்வை முன் வைக்க வேண்டும் என்பதே. இதை தமிழ் அரசியல் தலைவர்களும், செயற்பாட்டாளர்களும் இன்னும் அறியாது இருப்பது கவலைக்குரிய விடயம்.

இவ் நிலையில் தமிழர்களிடையே உள்ள வேறுபட்ட பிரிவுகள், தத்தமது அறிவுக்கும் அனுபவத்திற்கும் எட்டிய வாறு - ஒருவர் இமலாய பிரகடனம், இன்னுமொருவர் வட்டுகோட்டை பிரகடனம், இன்னும் சிலர் எக்கிய ராட்சியம், வேறு சிலர் சமாஸ்டி, இன்னுமொருவர் ஆறவாது திருத்த சட்டமென அடுக்கிகொண்டு போவது, “யானை தன் கையால் தனக்கு மண் அள்ளி போடுவது போல்” ஆகிறது.

சிங்கள பௌத்த அரசுகள் சர்வதேசத்திடம், தாம் எதற்காக தமிர்களிற்கான அரசியல் தீர்வை முன்வைக்க முடியாதுள்ளது என்பதனை, நியாயப்படுத்துவதற்கு நாமே சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுக்கிறோம் என்பதை, இவர்கள் யாரும் இன்றுவரை சிந்தித்தது கிடையாது. இவற்றிற்கு முக்கிய காரணிகள் - அவர்களது சுயநலமும் பணத்தை நோக்கிய பயணமும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**ஆறாம் திருத்தம் சட்டம்**

துர்அதிஸ்டவசமாக, ஆறாம் திருத்தம் சட்டம் பற்றி பேசுவது, தமிழர்களிடையே நன்றாக புகழ் பெற்ற பலாப்பழ கதையை ஒத்தது. சுருக்கமாக கூறுவதனால், அரசனிற்கு பழங்களை கொண்டு சென்றவர்களில் - அன்னாசிபழத்தை கொண்டு சென்றவருக்கு, அப் பழத்தை அரசனின் சேவர்கள் வற்புறுத்தி தீத்தும் பொழுது, அவர் வரிசையில் பலாப்பழது டன் நின்ற ஒருவரை எண்ணி சிரித்த கதை போல் உள்ளது.

இலங்கை-இந்திய உடன்படிக்கையின் அடிப்படையில் உருவாகிய பதின்மூன்றாம் திருத்த சட்டத்தை, சிறிலங்கா முற்றுமுழுதாக நடைமுறைபடுத்த வேண்டுமென, இந்தியா உட்பட ஐ.நா. மனித உரிமை சபை தீர்மானங்கள் தொடர்ச்சியாக அறிவுறுத்தியும், இன்றுவரை நடைபெறத நிலையில், ஆறாம் திருத்த சட்டம் பற்றி பேசுவது என்பது, வேலையற்றவர்களின் வேலை திட்டமாகவே இருக்க முடியும். அதவாது “பேய்க்கு பேன் பார்த்த” கதையாகவும் காணப்படுகிறது.

1989-90ம் ஆண்டு பிரேமதாசவுடன் த.ஈ.வி.பு மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பொழுது, ஆறாம் திருத்தம் சட்டம் பற்றி அவர்கள் முன் வைத்தது உண்மை. அவ் வேளையில் த.ஈ.வி.புகள் ஆயுத பலத்துடன் இருந்த காலம். இதன் பின்னர் த.ஈ.வி.புகள் எந்த பேச்சுவார்த்தையிலும் ஆறாம் திருத்த சட்டம் பற்றி முன் வைத்தது கிடையாது. காரணம் ஆயுத பலத்தினால், வடக்கு கிழக்கில் ஓர் நடைமுறை அரசு திகழ்ந்து என்பது யாவரும் அறிந்ததே.

**தமிழ் தேசிய கூட்டமைப்பு**

அது மட்டுமல்லாது, த.ஈ.வி.புகளினால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு மூலம், தேர்தலில் வெற்றியீட்டி பாரளுமன்ற சென்ற யாவரும், சிறிலங்காவின் ஆறாவாது திருத்த சட்டத்திற்கு கீழ் தமது சத்திய பிரமாணத்தை செய்தனர் என்பது இங்கு குறிப்பிட தக்கது.

அது மட்டுமல்லாது தமிழீழம் பெற்று தருவோம் என மக்களிற்கு கூறி, வாக்குகளை வாசிகரிக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பத்தின் தமிழ் காங்கிரஸ் கட்சி உட்பட சகல தமிழ் கட்சிகளும், இந்த ஆறாம் திருத்த சட்டத்தின் கீழ் தான் இன்றும் பாரளுமன்றத்தில் சத்திய பிரமாணம் செய்கிறார்கள்.

இவை யாவற்றையும் கடந்து, நாம் ஆறாம் திருத்த சட்டத்தை பற்றி மிக காராசரமாக இரவு பகலாக வேலை செய்வது என்பது, மக்கள் மீது சவாரி செய்வதற்கு ஒப்பானது. இப்படியான பகற்கனவு வேலைகளை நிறுத்தி, த.ஈ.வி.புகளின் தலைவர் கூறிய போல், இந்தியாவின் உறவை நாம் தேட வேண்டும். நாம் இவற்றை செய்யாத கட்டதில், வடக்கு கிழக்கு சிங்கள பௌத்த மயமாவதை யாராலும் தடுக்க முடியாது.

**ஏற்க போவதில்லை!**

இவ் யாதர்தங்களை, தமிழ் அரசியல் தலைவர்கள், அதாவது அரசியல் விளங்கி அரசியல் செய்யும் அரசியல்வாதிகளும், செயற்பாட்டாளர்களும் மனதில் கொள்ளும் வரை, மக்களின் தலைவிதியை இவர்கள் தமது சூதாட்ட பொருளாக்கி, தமது சுயநலத்தையே தமிழர் லட்சியமாக அரங்கேற்ற முற்சிப்பதை எம்மை போன்றவார்கள் ஒரு பொழுதும் ஏற்க போவதில்லை.

அடுத்து, இன்று பெரும்பாலான ஈழத்தமிழர்களின் திரைமறை வாழ்க்கை வேறு, எம்மை போன்ற சுதந்திரமான செயற்பாட்டளர்களின் கருத்து வேறாக காணப்படுவதற்கு, இவர்களினால் ஏற்படுத்தபட்டுள்ள மிகைபடுத்தலே முக்கிய காரணிகளாக காணப்படுகிறது.

மக்கள் பலரின் காதுகளில், தமிழீழ போராட்டத்தில் உயிரை அர்பணித்துள்ள அனைவரும், இதற்காகவா தமது உயிரை அர்பணித்தார்கள் என்ற கேள்வி தினமும் ஒலித்த வண்ணமே உள்ளது.

போர் காலத்தில், அதாவது 2009ம் ஆண்டு வரையும் அதன் பின்னரும், வேறுபட்ட சிறிலங்கா அரசாங்கங்களும் அவர்களது ஊது குழல்களும், எனக்கும் எமது அமைப்பான தமிழர் மனிதர் உரிமை மையத்திற்கும் பல பயமுறுத்தல்கள் மிரட்டல்களை செய்து தோல்வி கண்டவர்களே ஒழிய, எந்த வெற்றி வெற்றியும் கண்டது கிடையாது. ஆகையால் இவற்றுக்கு மேலாக இனிமேல் எந்த அரசோ அவர்களின் ஊதுகுழலுகளோ நன்றாக எதையும் முயற்சிக்கலாம்! நாம் யாரும் நிலவிற்கு பயந்து பரதேசம் போபவர்கள் அல்ல.

ஆகையால் தற்போதைய உண்மைகள் யாதார்தங்களை, தொடர்ந்து மக்களிற்கு கூறுவதற்கு, நாம் ஒரு பொழுதும் பின்னிற்க போவதில்லை. (முடிவு)

# அமெரிக்கா: தொடரும் இந்திய...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு பொருளாதார மற்றும் கலாசார பின்னணியில் இருந்து வந்த மாணவர்கள், தங்களது வெளிநாட்டு வாழ்க்கையில் ஒரு வித்தியாசமான அனுபவத்தை எதிர்கொள்கிறார்கள் என்று மற்றவர்கள் குறிப்பிடுகின்றனர்.

“சர்வதேச மாணவர்கள் தங்களது வீடுகளை அல்லது நாடுகளை விட்டு வெளியேறி புதிய கலாசாரத்திற்குச் செல்லும் போது தனித்துவமான அழுத்தங்களை எதிர்கொள்கின்றனர்,” என்கிறார் சினஸ்யூ தகவல்தொடர்பு நிர்வாக இயக்குநர் ரீனா அரோரா-சான்செஸ்.

அமெரிக்காவில் உள்ள மாணவர்களைத் தொடர்புகொள்வதற்கான வழிகாட்டுதல்களையும், வழக்கமான ஆன்லைன் மற்றும் நேரடி கலந்தாய்வுகளையும் இந்தியத் தூதரகம் வழங்குகிறது.

இந்தியா கிளப்பின் தலைவரான பிரதம் மேத்தா, ஜார்ஜியா இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியில் அதிகமாக இருக்கும் இந்திய மாணவர்களைச் சந்தித்துப் பேசியதாகக் கூறுகிறார்.

வளாகத்தில் பல்வேறு உளவியல் சிகிச்சை சேவைகள் உள்ளன, மேலும் பாதுகாப்பற்ற நிலையை உணரும் மாணவர்களுக்கு இந்திய துணைத் தூதரகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தவும் கிளப் உதவுகிறது. கூடுதலாக, சினஸ்யூ பல்கலைக்கழகத்தின் காவல் துறையுடன் மாணவர்களை இணைக்கும் ஒரு செயலியையும் வழங்குகிறது. வளாகம் மற்றும் அருகிலுள்ள மாணவர் குடியிருப்புகளுக்குச் சென்று வர இலவச பாதுகாப்பு உதவி சேவையையும் வழங்குகிறது.

கல்லூரிகளைத் தேர்ந்தெடுப்பதில் பாதுகாப்பு மற்றும் சட்ட அமலாக்கம் எப்போதும் ஒரு முக்கியக் காரணியாக இருப்பதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

பிப்ரவரியில், இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் எரிக் கார்செட்டி, “இந்தியர்கள் பாதுகாப்பாகப் படிக்கவும் வாழவும், அமெரிக்கா ஓர் அற்புதமான இடம் என்பதை உறுதி செய்வதில் நாங்கள் மிகவும் அர்ப்பணிப்போடு இருக்கிறோம்” என்றார். ஆனால் சமீபகாலமாகப் பல உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதால், இப்பிரச்னை தீவிர கவனம் பெற்றுள்ளது. ●